விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 141 வள்ளுவர் ஆண்டு 2057 சித்திரை 26 சனிக்கிழமை (09.05.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பெரும்பான்மையை நிரூபித்தது தமிழக வெற்றிக் கழகம்

### முதலமைச்சராக விஜய் இன்று பதவியேற்பு



(சென்னை)

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் பெரும்பான்மையை நிரூபித்த நிலையில் ஆட்சி அமைப்

15ஆம் பக்கம் பார்க்க

ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் முன்னாள் பிரதம அதிகாரி

## கபில சந்திரசேன மர்மமாக உயிரிழப்பு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் உயிரிழந்ததாக பொலிஸார் நேற்று கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.



கொள்ளுப்பிட்டி, பெத்ரிஸ் 04ஆம் பக்கம் பார்க்க

போதைக் கடத்தல்காரர்களுக்கு

## தண்டனை வழங்குவதை விரைவுபடுத்துங்கள்



### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தண்டனை வழங்குவதை விரைவுபடுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில்

## இளம் குடும்பஸ்தர் கடத்தப்பட்டு தாக்குதல்

### 3 மணி நேரத்துக்குப் பின் விடுவிப்பு

(வவுனியா)

வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட 02ஆம் பக்கம் பார்க்க

கே.கே.எஸ். – நாகப்பட்டினம்

## பயணிகள் கப்பல் சேவை இன்று இரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்குமான பயணிகள் கப்பல் சேவை சீரற்ற காலநிலை 15ஆம் பக்கம் பார்க்க

நீண்ட நாட்களுக்குப் பின்

## யாழ்.குடாநாட்டில் கொட்டித் தீர்த்த மழை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக நிலவி வந்த கடும் வெப்பமான

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் மழை காரணமாக செம்மணி அகழ்வுப் பணி பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை திடீரென பெய்த மழை காரணமாக செம்மணி புதைகுழி அகழ்வுப்பணிகள் பாதிப்படைந்தன.

புதைகுழிப் பகுதிக்குள் வெள்ள நீர் தேங்கியமையால், நல்லூர் பிரதேச சபையின் "கலி பவுசர்" மூலம் வெள்ள நீர் வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

15ஆம் பக்கம் பார்க்க

யாழ்.தேவி ரயில் சேவை

## வாரத்தில் 3 நாட்கள் சேவையில் ஈடுபடத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி புகையிரத சேவையானது வாரத்தில் மூன்று நாட்கள் சேவையில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இடம்பெற்று வரும் சேவைக்கு மேலதிகமாக வாரத்தில் திங்கட்கிழமை, புதன் கிழமை, வெள்ளிக் கிழமை ஆகிய மூன்று தினங்கள் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை சேவையில் 15ஆம் பக்கம் பார்க்க

ஒக்ரோபர் முதல்

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

### 169, 300 பேர் கைது

(கொழும்பு)

முழு நாடுமே ஒன்றாக தேசிய மட்டத்திலான விசேட நடவடிக்கை 169, 300 பேர் ஆரம்பிக்கப்பட்ட நாள் 04ஆம் பக்கம் பார்க்க

தகன மேடையை உடைத்து

## மனித என்புகளை மீட்க நடவடிக்கை

### சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின்போது சித்துப்பாத்தி இந்து மயானத்தின் எரிதகன மேடைக்கு அடியில் மனிதஎன்புத்தொகுதி ஒன்று கண்டறியப்பட்டுள்ள நிலையில் இதனை முழுமையாக 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளம் குடும்...

துடன் மூன்று மணி நேரத்தின் பின் விடுவிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த நபர் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் பேருந்து ஒன்றில் ஏறித் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த போது முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் அவரது கைத்தொலைபேசியைப் பறித்துக் கொண்டு பேருந்தில் இருந்து கீழே இறங்கியுள்ளார்.

இதன்போது அங்கு நின்ற முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் சிலர் குறித்த இளம் குடும்பஸ்தரை முச்சக்கர வண்டியில் ஏறுமாறு கூறி ஏற்றிக் கொண்டு வவுனியா, புதிய பேருந்து நிலையத்திற்கும் சோயா வீதிக்கும் இடையிலுள்ள வயல்வெளிப்பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு தன்னைத் தாக்கியதுடன் அவர்களால் எழுதப் பட்ட கடிதம் ஒன்றில் கையொப்பமும் பெற்றதாகவும் தொலைபேசியிலிருந்த சில ஆவணங்களும் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின் மாலை 6.30 இற்கு பின்னர் தன்னை விடுவித்ததாகவும் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,250)


ஆடுகள் விற்பனைக்கு

மெட்டைச் சணல் ஆடு இரண்டு குட்டிகளுடன் 90,000/=

யமுனா பாரி கடாய் குட்டிகள் Brown நிறம், மாவெள்ளை இரண்டும் 190,000/=

(7573)

076 234 6416

நயினை அம்மன்

Real Estate

யாழ்ப்பாணம், கொழும்பு, நயினாதீவு, வேலணை போன்ற இடங்களில் காணி, வீடு விற்க, வாங்க உள்ளவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

(2309)

076 311 9485
076 050 3863


## மனித என்பு...

மீட்பதற்கு குறித்த தகன மேடையை உடைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நீதிமன்ற அனுமதியைப் பெற்ற பின்னரே மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று செம்மணி புதைகுழி வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதியின் மண்டையோடு மாத்திரம் அத்திவாரத்திற்கு வெளியே தென்படுகின்றது. ஏனைய உடல் உறுப்புகள் தகன மேடையின் அத்திவாரத்திற்கு உட்புறமாகவே காணப்படுகின்றன.

பொதுவாக ஒரு மனித என்புத்தொகுதி முழுமையாகத் துப்பரவு செய்யப்பட்டு மண்டையோடு முதல் பாதம் வரை வரைபடம் வரையப்பட்ட பின்னரே அதற்குரிய உத்தியோகபூர்வ இலக்கம் வழங்கப்படும். தற்போது அந்த என்புத்தொகுதி அத்திவாரத்திற்குள் சிக்கியுள்ளதால் அதனை முழுமையாக அகழ்ந்து எடுப்பதில் சிக்கல் நிலவுகிறது.

இது தொடர்பான சட்ட ரீதியான நடைமுறைகளைப் பின்பற்றி நீதிமன்றத்தின் அனுமதியை பெற்ற பின்னரே மேடை உடைக்கப்பட்டு அடியில் உள்ள எச்சங்கள் மீட்கப்படும் என்றார். (ம-7)


காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் A9 றோட்டில் இருந்து 100m தூரம் நான்கு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் நல்ல தண்ணீர் ஊற்று, நல்ல சூழல், மேட்டு நிலம், நிலப்பரப்பு, சகல ஆவணங்களுடன் நீண்டகால தோம்பு.

பார்வையிடும் நேரம்

காலை 8.30 – மாலை 6.30 வரை

(7574)

தொடர்பு : 077 623 4204

காணி விற்பனைக்கு

மருதனார்மடம் உரும்பிராய் பிரதான வீதியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, இராமநாதன் அக்கடமியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் வீதி முகப்புடன் 6 பரப்புக்காணி விற்பனைக்கு.

மருதனார்மடம் உரும்பிராய் பிரதான வீதியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் விளாத்தியடி லேனில் தார்ப்பாதையுடன் 3¼ பரப்பு, 1 ¾ பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட 6 காணித் துண்டுகள் விற்பனைக்கு. மருதனார்மடத்தில் இருந்து 1 Km தூரத்தில்

(7572)

தொடர்பு: 077 225 9798


## மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 01 - 1954

மறைவு 05 - 05 - 2026

### சிவமணி சந்திரவதனா
### (ஓய்வு நிலை ஆசிரியர்)

6ம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவமணி சந்திரவதனா அவர்கள் கடந்த (05.05.2026) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவமணி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - கனகம்மா தம்பதியரின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகளும் விவேக்கா அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சந்திரோதயம் மற்றும் சந்திரகாந்தி, தவநாயகி, உதயகுமார், சந்திரவடிவு, செல்வகுமார், நந்தகுமார், சந்திரமதி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாசிலாமணி (கனடா), நடனசிகாமணி, காலஞ்சென்ற நடராஜமணி மற்றும் புஷ்பமாலா (கனடா), பிரபுசிகாமணி (கனடா), கலையரசி (கனடா), மாதினி (கனடா), மகேசன், கனகரத்தினம், யசிந்தா, ரவீந்திரன், அனுசா, அனுஷா, இந்திரன், குமுதா ஆகியோரின் மைத்துனியும் காஞ்சனமாலா, சிவகலை, ஞானசொரூபி, சுப்பிரமணியம், ஆனந்தி, ஞானேஸ்வரன், விஜயரட்ணம் ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

6ம் வட்டாரம்,
மண்டைதீவு.

(7567)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 - 06 - 1948

மறைவு 05 - 05 - 2026

### செல்வி
### சிவசம்பு சந்திரோதயம்

6ம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சந்திரோதயம் அவர்கள் கடந்த (05.05.2026) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - கனகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும் சந்திரகாந்தி, காலஞ்சென்ற சந்திரவதனா மற்றும் தவநாயகி, உதயகுமார், சந்திரவடிவு, செல்வகுமார், நந்தகுமார், சந்திரமதி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேசன், கனகரத்தினம், யசிந்தா, ரவீந்திரன், அனுசா, அனுஷா, இந்திரன், குமுதா ஆகியோரின் மைத்துனியும் சோபிகா, சாமந்தி, விவேக்கா, சரண்யா, சம்யுக்தா, துவாரகா, வாரணன், விதுஷிகா, அருணன், அஸ்மிகா, விதுசன், சுபாங்கி, நிலானிகா ஆகியோரின் பெரியம்மாவும் நிருபனா, நிவேத், அஜிதன், அபிஷனா, அபூர்வணா, ஆதனா, சயானா, விசால், விகாஷ், ஆரதி, சச்சின், அனிருத் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

6ம் வட்டாரம்,
மண்டைதீவு.

(7567)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாம் - இலங்கை இடையே 05 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



(கொழும்பு)

வியட்நாம் மற்றும் இலங்கை இடையே பல்வேறு துறைகள் சார்ந்து கைச்சாத்திடப்பட்ட 05 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வு, இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச்செயலாளருமான டோலாம் ஆகியோர் முன்னிலையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

வியட்நாம் - இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில் சுற்றுலாத்துறை, பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பு, மதம், சிவில், வர்த்தகம், போக்குவரத்து மற்றும் பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் ஆகிய துறைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

அத்துடன் வியட்நாம் அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 100 மெட்ரிக் தொன் உரத் தொகுதி மற்றும் விவசாய அமைச்சின் செயலாளர் டி. பி. விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது. இலங்கை மற்றும் வியட்நாம் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 2025 ஆம் ஆண்டு வியட்நாமிற்கு மேற்கொண்ட அரச பயணத்தைத் தொடர்ந்து, இலங்கை ஜனாதிபதியின் அழைப்பையேற்று வியட்நாம் ஜனாதிபதியின் இந்த அரச விஜயம் இடம்பெற்றது. (நி)

## மௌனம் காக்கும் நிதியமைச்சு முறைகேடுகளை மூடிமறைக்கும் முயற்சியா?

## நாமல் குற்றச்சாட்டு

நாட்டில் இடம்பெற்றுள்ள பாரிய நிதி முறைகேடுகள் காரணமாக 80 கோடி ரூபாவிற்கும் அதிகமான பொதுப் பணம் இழக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஹொரண பகுதியில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

இந்த நிதி முறைகேடுகள் குறித்து கடந்த ஜனவரி மாதமே நிதியமைச்சரால் ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டினார்.

"80 கோடி ரூபாவிற்கும் அதிக பணம் திருடப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதி, நிதிச்செயலாளர், நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி என அனைவரும் இது குறித்து மௌனம் காக்கின்றனர். தற்போதைய நாணய மாற்று விகிதத்தின்படி கணக்கிட்டால் இந்த இழப்பு இன்னும் அதிகமாக இருக்கும்" என அவர் குறிப்பிட்டார். (நி)

## அரகலய இழப்பீடு தொடர்பில் கோட்டாவுக்கு மீண்டும் அழைப்பாணை

அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவில் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மீண்டும் ஒரு அழைப்பாணையை அனுப்புமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2022, மே 9 அன்று "அரகலய" போராட்டத் தளத்தின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து வெடித்த தீவு தழுவிய அமைதியின்மையின் போது, வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட அல்லது சேதப்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டவிரோதமாக வழங்கப்பட்டதாகக் கூறப்படும் நிதியை மீட்பதை இந்த மனு கோருகிறது.

நேற்று நடைபெற்ற விசாரணையின் போது, கோட்டபாய ராஜபக்ஷவுக்கு புதிய அழைப்பாணையை அனுப்புமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. (நி)


இறையோடு இணைந்த

01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

திருமதி மகேஸ்வரி சின்னத்துரை

தாயின் மடியில் : 1937.08.05 இறைவன் அடியில் : 2025.04.21

அன்பினால் அன்பிற்கோர்
அடையாளம் நீங்கள் அம்மா!
என்றுமே எங்களின் நிலையான
சொந்தம் நீங்கள் அம்மா!
நம்பியோர்க்குதவும் தெய்வ வடிவமே
எம் நெஞ்சில் நிறைந்த அம்மா!
நீங்கள் இல்லாத கணம்
ஒவ்வொன்றும் யுகம் எமக்கு அம்மா!

3ம் கட்டை,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்

(7576)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிட்செல் மார்ஷின் அதிரடி சதத்தால் லக்னோவிடம் சரணடைந்த ஆர்.சி.பி



பாரத ரத்னா ஸ்ரீ அடல்பிஹாரி வாஜ்பாய் ஏகானா கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் மழையால் பாதிக்கப்பட்ட ஐ.பி.எல் 50 ஆவது போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி, ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இரு அணிகளுக்கும் தலா 19 ஓவர்களாகக் குறைக்கப்பட்ட இந்த ஆட்டத்தில், மிட்செல் மார்ஷின் அதிரடியான சதம் லக்னோ அணிக்கு ஒரு பிரம்மாண்டமான ஓட்ட எண்ணிக்கையைக் குவிக்க அடித்தளத்தை அமைத்தது.

குறித்த இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூரு அணி பந்து வீச்சினை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்ய அழைக்கப்பட்ட லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி தொடக்கத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தியது.

மிட்செல் மார்ஷ் தனது கிரிக்கெட் வாழ்க்கையை வரையறுக்கும் ஒரு இன்னிங்ஸை ஆடி, 56 பந்துகளில் 8 பவுண்டரிகள் மற்றும் 9 சிக்ஸர்களுடன் 111 ஓட்டங்களை விளாசினார்.

அவரை அடுத்து நிக்கோலஸ் பூரன் 23 பந்துகளில் 38 ஓட்டங்கள் எடுத்து அதிரடியாக ஆடி இரண்டாவது உத்வேகத்தை அளித்தார்.

இதனால் நிர்ணயிக்கப்பட்ட 19 ஓவர்கள் நிறைவில் லக்னோ அணியானது மூன்று விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்களை குவித்தது. பின்னர் சேஸிங்கில் பெங்களூரு அணி மோசமான தொடக்கத்தைப் பெற்றது.

மொஹமட் ஷமியின் முதல் ஓவரில் ஜேக்கப் பெத்தேல் ஆட்டமிழக்க இரண்டாவது ஓவரின் இரண்டாவது பந்துவீச்சில் விராட் கோலி எதுவித ஓட்டமின்றி பிரின்ஸ் யாதவ்வின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

பின்னர் அணித் தலைவர் ரஜத் பட்டிதார் 31 பந்துகளில் 61 ஓட்டங்களை குவித்து பெங்களூரை போட்டியில் தக்க வைத்துக் கொண்டார். அவருக்கு தேவ்தத் படிக்கல் 34 ஓட்டங்கள் எடுத்து சிறந்த பங்களிப்பினை வழங்கினார்.

அவர்களை அடுத்து டிம் டேவிட் (17 பந்துகளில் 40 ஓட்டம்), க்ருணால் பாண்டியா (16 பந்துகளில் 28 ஓட்டம்) மற்றும் ரொமாரியோ ஷெப்பர்ட் (15 பந்துகளில் 23 ஓட்டம்) ஆகியோர் அணியை வெற்றிக்காக அழைத்துச் செல்லப் போராடினர்.

இருப்பினும் இறுதியாக பெங்களூரு அணி 19 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 203 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. (3)

## கபில...

வீதியிலுள்ள ஒரு குடியிருப்பில் நேற்றுக் காலை அவரது சடலம் கண்டெடுக்கப் பட்டது.

குறித்த வீட்டினுள் உள்ள ஒரு படுக்கையறையில் அவரது சடலத்தை கண்டெடுத்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கபில சந்திரசேன நீண்டகாலமாக ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு வந்தார்.

2013 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்காக ஆறு ஏர்பஸ் ஏ-330 மற்றும் எட்டு ஏ-350 ரக விமானங்களை வாங்கியது தொடர்பாக அவரும் அவரது மனைவியும் 2 மில்லியன் அமெரிக்க டொலர் இலஞ்சம் பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டனர்.

பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவு பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த விவகாரத்தை விசாரித்து 2020 இல் தம்பதியினரைக் கைது செய்து பின்னர் அவர்களைப் பிணையில் விடுவித்தது.

இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவும் ஒரு விசாரணையைத் தொடங்கியது.

அதன் விளைவாக இந்த ஆண்டு மார்ச் 12 அன்று கபில சந்திரசேன மீண்டும் கைது செய்யப்பட்டார்.

விசாரணையின் போது கூறப்படும் இலஞ்சப் பணத்திலிருந்து அப்போதைய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜெயரத்னவுக்கு ரூ.20 மில்லியனையும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ரூ. 60 மில்லியனையும் விநியோகித்ததை அவர் ஒப்புக்கொண்டதாக அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இருப்பினும் அந்த வாக்குமூலம் வற்புறுத்தலின் பேரில் பெறப்பட்டதாக அவரது சட்டத்தரணி வாதிட்டார். வழக்கு விசாரணைக்காக மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரியங்கர ஜெயரத்ன இருவரும் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக மே 12 அன்று முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

சந்திரசேன 54 நாட்கள் நீதிமன்றக் காவலுக்குப் பின்னர் மே 5 அன்று 5 இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று பிணைதாரர்கள் உள்ளிட்ட நிபந்தனைகளின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக இரண்டு நபர்கள் மோசடியாக உறவினர்களாகக் காட்டப்பட்டதைப் பொலிஸார் பின்னர் கண்டறிந்ததைத் தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மே 7 அன்று பிணை நிபந்தனைகளை மீறியது மற்றும் நீதிமன்ற நம்பிக்கையை மீறியது ஆகிய குற்றச்சாட்டுகளைக் காரணம் காட்டி சந்திரசேனவை மீண்டும் கைது செய்ய கொழும்பு பிரதான நீதிபதி நேற்று முன்தினம் புதிய பிடியாணை பிறப்பித்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7)


## வேலையாட்கள் தேவை

வடமாகாணத்தில் அச்சுத்துறையில் பிரபலம் பெற்ற "Arissona pvt ltd" நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிய தங்களுக்கு அரியதொரு வாய்ப்பு.

❖வரவேற்பாளர் - Receptionist
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் .
- 21 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கணணி அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- மும்மொழியிலும் பரீட்சயமானவராக இருத்தல் விரும்பத்தக்கது.
- முன் அனுபவம் விரும்பத்தக்கது.

❖காசாளர் - Cashier
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
- 21 தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கணணி அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் விரும்பத்தக்கது.

❖வடிவமைப்பாளர் - Graphic Designer
- ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- முன் அனுபவம் விரும்பத்தக்கது
- Coral Draw, Adobe Illustrator, Photo Shop, Indesign போன்றவற்றில்
- பரீட்சயமானவராக இருத்தல் வேண்டும்.
- Coral Draw, Adobe Illustrator, Photo Shop, Indesign போன்றவற்றில் அடிப்படை அறிவுடன் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

❖அச்சு இயந்திரங்களை இயக்குபவர் (Mechine Opeator)
- முன் அனுபவம் விரும்பத்தக்கது.

❖அலுவலக உதவியாளர் (Office Boy)
- ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

பிற மாவட்டங்களிலிருந்து வந்து பணிபுரிய விரும்புபவரிற்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக் கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 20.05.2026 இற்கு முன்னதாக விண்ணப் பிக்கவும்.

மின்னஞ்சல் முகவரி - arissonaa@yahoo.com
தபால் முகவரி - "Arissona pvt ltd"
91, பலாலி வீதி,
திருநெல்வேலி.

வட்சப் இலக்கம் (WhatsAPP No) - 077 477 9450

(7575)


## தண்டனை...

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டுச் சபையின் கூட்டத்திலேயே அவர் இதனை வலியுறுத்தினார்.

கைப்பற்றப்படும் போதைப்பொருட்கள் மீண்டும் எக்காரணம் கொண்டும் சமூகத்துக்குள் ஊடுருவுவதைத் தடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

அவற்றைச் சட்டபூர்வமான நடைமுறைகளின் கீழ் விரைவாக அழிப்பதற்கும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குத் தண்டனை வழங்கும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கும் அவர் அறிவுறுத்தினார்.

முழு நாடுமே ஒன்றாக என்ற செயற்பாடு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சுற்றிவளைப்புகள் 80 வீதத்தால் அதிகரித்துள்ளன என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

புனர்வாழ்வு பெற்றவர்கள் மீண்டும் போதைக்கு அடிமையாவதைத் தடுக்க சுயதொழில் பயிற்சிகள் மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தித் திட்டங்களை மத வழிபாட்டுத் தலங்களை மையப்படுத்தி முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். (ம-7)

## நாடு முழுவதும்...

முதல் இதுவரையான காலப்பகுதியில் 169, 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் நேற்று வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 169,300 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 1,937 கிலோ 270 கிராம் ஹெரோயின், 1,994 கிலோ 241 கிராம் ஐஸ் போதைப்பொருள், 431 கிலோ 242 கிராம் குஷ் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப்பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இக்காலப்பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 2,767 பேருக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன் 318 பேர் தொடர்பில் சட்டவிரோத சொத்துக் குவிப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் 2,031 சந்தேகநபர்கள் புனர்வாழ்விற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரி இறக்குமதி முறைகேடு விசாரணைகள் ஆரம்பித்தது ஆணைக்குழு

(கொழும்பு)

2009ஆம் ஆண்டு முதல் 2026 ஏப்ரல் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நிலக்கரி இறக்குமதி தொடர்பான முறைகேடுகளைக் கண்டறிய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணை ஆணைக்குழு, தனது ஆரம்பகட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது

·நிலக்கரி இறக்குமதி, நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்தல் மற்றும் அது சார்ந்த ஏனைய செயற்பாடுகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள், முறைகேடுகள் மற்றும் சட்டவிரோதச் செயல்கள் குறித்து விசாரிப்பதே இந்த ஆணைக் குழுவின் முக்கிய பணியாகும்.

நிலக்கரி இறக்குமதி தொடர்பான முறைகேடுகள் குறித்து ஏதேனும் தகவல்கள் அல்லது சாட்சியங்கள் பொது மக்களிடமோ அல்லது நிறுவனங்களிடமோ இருந்தால் அவற்றை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஆணைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் இந்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அண்மையில் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போலி டொலருடன் சிக்கிய வெளிநாட்டவர்கள்

(கொழும்பு)

போலி அமெரிக்க டொலர்களைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் காலியில் இரு வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிலெல்ல பகுதியில் உள்ள தங்குமிடம் ஒன்றில் குறித்த இருவரும் தங்கியிருந்துள்ளனர்.

இந்தநிலையில் வணிக நிறுவனம் ஒன்றில் கொடுக்கல் வாங்கலுக்காக 400 போலி அமெரிக்க டொலரை வழங்கியதாக இவர்கள் மீது முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.



இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சுற்றுலா விசா மூலம் இலங்கையில் தங்கியிருந்த சந்தேக நபர்களிடமிருந்து மேலும் 5,200 போலி அமெரிக்க டொலர் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக 26 மற்றும் 27 வயதுடைய தஜிகிஸ்தானைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொலிஸாரிடம் சிக்கிய போதைப்பொருள் வலையமைப்பு

(கொழும்பு)

பண்டாரகம பகுதியில், "டுபாய் சுத்தா" என்றழைக்கப்படும் பெரும் அளவிலான போதைப்பொருள் விற்பனையின் பிரதான விநியோகஸ்தர் உட்பட 7 சந்தேக நபர்களை பண்டாரகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போதைப்பொருள் பொதி செய்யப்படும் இடமொன்றை சுற்றிவளைத்த போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது 15 இலட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடைய 50 கிராம் ஹெரோயின் மற்றும் 25 கிராம் ஐஸ் போதைப்பொருள், போதைப் பொருட்களை பொதி செய்ய பயன்படுத்தப்படும் விசேட காகிதங்கள், பொலித்தீன் பைகள், 4 கையடக்கத் தொலைபேசிகள், கார் ஒன்று மற்றும் ஏனைய உபகரணங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

பண்டாரகம, வெல்மில்ல அலோத்தியாவ பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்திற்கிடமான குழுவினர் தங்கியிருப்பதாக பண்டாரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ள நிலையில், பண்டாரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# இலங்கை-வியட்நாம் நேரடி விமான சேவை

(கொழும்பு)

இலங்க்கக்கும் வியட்நாமுக்கும் இடையே நேரடி விமானச் சேவை ஆரம்பிக்க உள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், வியட்நாம் எயார்லைன்ஸ் விமான சேவையானது இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வந்துள்ள வியட்நாம் ஜனாதிபதி டோ லாம் உம், ஜனாதிபதி அநுர இணைந்து பங்கேற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அநுர இதனை தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இருதரப்பு வர்த்தகம் 2030ஆம் ஆண்டளவில் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3370

**கலையரசி**


இருந்து நானும் 3 நாளா News பார்த்திட்டு இருக்கன்




யாரையாச்சும் CM ஆக்கி தொலைங்கடா

**சதீஷ்**


நாம் எவ்வளவு டிசைன் டிசைனா பிளான் போட்டாலும்



கடைசியில மேல இருக்கிறவன் போடுற பிளான் படி தான் எல்லாம் நடக்குது

**சர்மி**


தம்பி உங்க வலது கையில இருக்கிற இந்த மச்சத்தை பார்த்தால் நல்ல மனைவி கிடைக்கும் போல இருக்கு...



யோவ் அது மச்சம் இல்லை. சூடு வைச்ச தழும்பு. அதை வைச்சதே என் பொண்டாட்டி தான்.

**ஜீவிதன்**

ஏன் பெண்கள் ஆண்களை விட ஆரோக்கியமாகவும் நீண்ட நாள் வாழ்கிறார்கள் தெரியுமா?



ஏன் என்றால் பெண்களுக்கு "பொண்டாட்டி" கிடையாது

**பூஜா**

அண்ணா... சாப்பாடு கூட அப்பளம் ஏன் வைக்கிறார்கள் தெரியுமா... அட ஏன் என்று சொல்லுடா...



சோறு சூடாக இருந்தால் விசிறிக்கத் தான்

**விதுஷன்**

அதென்னப்பா.. தேர்தல் நேரத்தில மட்டும் ரோடு போடுறீங்கள்?



அட மக்களுக்காக யாரு போட்டது? ஓட்டு கேட்க போறப்போ நம்ம கார் அலுங்காம, குலுங்காமல் போகணும் தானே?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வவுனியா பம்பை மடுவில் அதிகரிக்கும் யானைகளின் அட்டகாசம்




## பொதுமக்கள் கவலை

(வவுனியா)

வவுனியா, பம்பைமடு மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களில் காட்டு யானைகளின் ஊடுருவல் மற்றும் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

யானை ஊடுருவல் தொடர்பாக கடந்த ஏப்ரல் 30, 2026 அன்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போது, யானைகளிடமிருந்து கிராமத்தைப் பாதுகாக்க விரைவில் பாதுகாப்பு வேலிகள் அமைத்துத் தரப்படும் என அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர்.

இருப்பினும், இந்தக் கூட்டம் நடைபெற்று ஒரு வாரம் கூட நிறைவடையாத நிலையில், மீண்டும் யானைகள் கிராமத்திற்குள் புகுந்து அழிவுகளை ஏற்படுத்தி வருவது மக்கள் மத்தியில் பெரும் கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பம்பைமடு - கல்வெளிப் பகுதியில் உள்ள தென்னந்தோட்டத்திற்குள் புகுந்த யானைகள், பல வருடங்களாகப் பராமரிக்கப்பட்டு வந்த தென்னை மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்துள்ளன. தென்னை மற்றும் ஏனைய பலன் தரும் மரங்கள் இவ்வாறு தொடர்ச்சியாக அழிக்கப்படுவதால், தமது பொருளாதார வாழ்வாதாரம் அடியோடு சீர்குலைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யானைகளின் ஊடுருவலைத் தடுக்க நிரந்தரத் தீர்வை விரைந்துகாணுமாறும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (3)

# 'மஞ்ச நாதம்' சிறப்பு மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு "மஞ்ச நாதம்" சிறப்பு மலர் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபையின் தலைவர் கா. சுதாகரன் தலைமையில் இம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக மாவட்டச் செயலர் க.சிவகரன், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஞான சுந்தரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# அறிவுத்திருக்கோவிலில் யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக் கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா சளித் தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினைகள் தீர எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற் கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் என்பன வழங்கப்படும்.

பயிற்சிகளை 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலாரும் பங்கு பெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக் கலைப்பேராசிரியர் கே. ஆர் முனிரத்தினம் வழங்குவார்கள். மேலதிக தகவல்களுக்கு 021222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (3)



வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யா/வயாவிளான் மத்திய கல்லூரி அணியினர் 18 வயதுப் பிரிவில் 2 ஆம் இடத்தினையும் 16 மற்றும் 20 வயதுப் பிரிவுகளில் 3 ஆம் இடங்களையும் பெற்று மாகாண மட்டப் போட்டிகளிற்கு தெரிவாகியுள்ளனர்.

# 25 இலட்சம் மதிப்புள்ள உலர் மஞ்சள் கடத்தல்

## இருவர் கைது



(மன்னார்)

சட்டவிரோதமாக கடல் வழியாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட சுமார் ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள 1,179 கிலோகிராம் உலர்ந்த மஞ்சளை வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்கள் சிறப்பு அதிரடிப் படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் சிலவத்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சவாரிபுரம் கடற்கரைப் பகுதியில், நேற்று முன்தினம் குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இராணுவப் புலனாய்வுப் பிரிவினரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், மன்னார் சிறப்பு அதிரடிப் படை முகாமில் இணைக்கப்பட்ட வடமாகாண சிறப்பு அதிரடிப் படை அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது இந்த கைது இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சவாரிபுரம், சிலவத்துரா பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவரும், மற்றொருவர் மரிச்சுக்கட்டி, சிலவத்துரா பகுதியில் உள்ள யாசின் நகர் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுங்க வரி செலுத்தாமல் நாட்டிற்குள் கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் உலர்ந்த மஞ்சள் கையிருப்பும் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபர்களும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களும் தெளிப்பளை சுங்கத் துணைத்தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# முல்லையில் அஞ்சல் வாகன சேவை நேற்று முதல் ஆரம்பம்




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த அஞ்சல் வாகன சேவை குறைபாட்டிற்கு தீர்வாக நேற்று முதல் அஞ்சல் வாகனம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் குமாரவேலு அகிலன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அஞ்சல் வாகன சேவை ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு இதன் மூலம் தீர்வு கிடைத்துள்ளதாக நம்பிக்கை வெளியிட்டார்.

புதுக்குடியிருப்பிற்கான அஞ்சல் பரிவர்த்தனைகள் கடந்த 2021ஆம் ஆண்டு வரை அஞ்சல் திணைக்கள வாகனம் மூலம் இடம்பெற்று வந்ததாகவும், அதன் பின்னர் உரிய வாகன வசதி இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கவனம் செலுத்தியதாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் துரை ராசா ரவிகரனுக்கும் எழுத்து மூலமாக அறிவித்திருந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த மாதம் பாராளுமன்ற அமர்விலும் இவ்விடயம் முன்வைக்கப்பட்டதாகவும், அப்போது சம்பந்தப்பட்ட அமைச்சர் முல்லைத் தீவு மாவட்டத்திற்கு அஞ்சல் வாகனம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மீண்டும் இவ்விடயம் குறித்து குரல் கொடுத்த பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், "முல்லைத்தீவு மாவட்டம் மீண்டும் புறக்கணிக்கப்படுகின்றதா?", அஞ்சல் வாகனம் ஏன் அனுப்பப்படவில்லையென கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து உடனடியாக அஞ்சல் வாகனம் அனுப்பப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

வவுனியாவிலிருந்து நேற்று அதிகாலை புறப்பட்ட அஞ்சல் வாகனம் முல்லைத் தீவு, முள்ளியவளை, புதுக் குடியிருப்பு, உடையார்கட்டு ஊடாக விசுவமடு வரை சேவையில் ஈடுபடவுள்ளதாகவும், இதன் மூலம் விரைவு அஞ்சல் சேவைகளை துரிதமாக மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் இனிமேல் அஞ்சல் விநியோகத்தில் கால தாமதம் ஏற்படாது என நம்பிக்கை வெளியிட்ட அவர், இச்சேவையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்த பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அஞ்சல் மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் மற்றும் அஞ்சல் திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றியையும் தெரிவித்தார். (3-299)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# தமிழக ஆளுநருக்கு எதிராக வெடித்த போராட்டங்கள்

(சென்னை)

**ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், விஜய்யை ஆட்சி அமைக்க அழைக்காததைக் கண்டித்து, தமிழகத்தில் நேற்று தமிழக வெற்றிக்கழக ஆதரவாளர்கள் மற்றும் காங்கிரஸ் தொண்டர்கள் தலைமையில் போராட்டங்கள் வெடித்தன.**





நடிகரும் அரசியல் வாதியுமான விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தேர்தலில் 100இற்கும் மேற்பட்ட இடங்களை வென்றபோதிலும், பெரும்பான்மை பெறுவதற்கு சுமார் 10 இடங்கள் குறைவாகப் பெற்றது.

காங்கிரஸின் ஆதரவுடன் கூட, அக்கட்சியால் 113 இடங்களை மட்டுமே எட்ட முடிந்தது.

இது, ஆட்சி அமைக்கத் தேவையான 118 இடங்கள் என்ற பெரும்பான்மையை விட இன்னும் குறைவாகவே உள்ளது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று தமிழக ஆளுநர் அலுவலகம் வெளியிட்ட தகவலின்படி,

இரண்டு நாட்களில் விஜய்யுடன் நடந்த இரண்டாவது சந்திப்பில், ஆட்சி அமைக்க பெரும்பான்மை பெறுவது 'அவசியம்' என்று அவரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், விஜய்யின் ஆதரவாளர்கள் இந்த முடிவு தவறானது என்று கூறி, சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க அவருக்கு அனுமதி அளிக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

இதற்கிடையில், அதிமுக மற்றும் திமுக இடையே ஒரு சாத்தியமான கூட்டணி குறித்த பேச்சும் அடிபடுகிறது, ஆனால் இதுகுறித்து எந்த அதிகாரபூர்வ அறிவிப்போ அல்லது உறுதிப்படுத்தலோ வெளியாகவில்லை. (நி)

## இந்திய கம்யூனிஸ்ட் த.வெ.கவுக்கு ஆதரவு

(சென்னை)

விஜய் தலைமையிலான த.வெ.க அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு அளிப்பது என்று தலா 2 எம்எல்ஏ.க்களை வைத்துள்ள இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

சட்டசபை தேர்தலில் 108 தொகுதிகளில் வென்ற த.வெ.க, காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க உரிமை கோரியுள்ளது. ஆனால், போதிய பெரும்பான்மை இல்லாத நிலையில் ஆட்சி அமைக்க விஜய்யை கவர்னர் அழைக்கவில்லை. இந்நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் விசிகவிடம் த.வெ.க சார்பில் ஆதரவு கோரி கடிதம் தரப்பட்டது. நேரிலும் சென்று நிர்வாகிகள் பேச்சு நடத்தினர்.

இதை தொடர்ந்து நேற்று நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில், இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும், த.வெ.க அரசை வெளியில் இருந்து ஆதரிக்க முடிவு எடுத்துள்ளன. இதற்கான கடிதத்தை இந்திய கம்யூனிஸ்ட் நேற்று அதிகாரபூர்வமாக வழங்கியது. இதே முடிவை மார்க்சிஸ்ட் கட்சியும் எடுத்துள்ளது. அதிகாரபூர்வ கடிதம், விரைவில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரு கட்சிகளையும் பின்பற்றி விசிகவும் ஆதரவு அளிக்கும் நிலை உருவாகியுள்ளது. (நி)

## திமுக-அதிமுக இணைந்து ஆட்சியா? வதந்தி என்கிறார் கனிமொழி

(சென்னை)

திமுக- அதிமுக இணைந்து ஆட்சி அமைப்பதாக கூறப்படுவது வதந்தி அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது என திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி தெரிவித்தார்.

சென்னையில் நிருபர்களிடம் கனிமொழி கூறியதாவது: தேர்தல் முடிவுகள் வந்து யாருக்குமே ஒரு தெளிவான தீர்க்கமான பெரும்பான்மையை கொடுக்காத ஒரு சூழ்நிலையில் நிறைய குழப்பங்கள் இருக்கக்கூடிய நிலையே அது உருவாக்கி இருக்கிறது. அடிப்படையில் அதுதான் இத்தனை குழப்பங்களுக்கும் காரணமாக இருக்கிறது என கனிமொழி தெரிவித்தார்.

ஆளுநருக்கு எதிராக தொடர்ந்து திமுக நிறைய புகார்களை எழுப்பி இருக்கிறது.

தற்போது அரசியலமைப்பு சட்டத்தின்படி ஆளுநரின் செயல் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருக்கிறதா என்ற கேள்வி, "இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் நிறைய குழப்பங்கள் இருக்கிறது.

ஒவ்வொருவரும் இதற்கான விளக்கங்கள், எதிர்மறை கருத்துக்கள் அல்லது ஏற்றுக்கொள்ள கூடிய கருத்துக்களை எல்லாம் சொல்லி கொண்டு இருக்கும் சூழ்நிலையில், எங்களுடைய நிலைப்பாடு ஆளுநர் வேண்டாம். இந்த நிலைப்பாட்டில் இருந்து திமுக தன்னை எந்த காலத்திலும் மாற்றிக் கொள்ளாது" என கனிமொழி பதில் அளித்தார். (நி)


மணிவிழா வாழ்த்து



திரு.
செல்லத்துரை
நவரெத்தினராசா
(SLPS - II)

சேவை விபரம்

- 20.01.1989 – 02.02.1992
  மன்/இலுப்பைக்கடவை மகா வித்தியாலயம்
  (கணித/ விஞ்ஞான ஆசிரியர்)
- 08.02.1992 – 31.12.1992
  மன்/கூராய் அ.த.க பாடசாலை
  (கடமை நிறைவேற்று அதிபர்– முதல் அதிபர் founder of school)
- 01.01.1993 – 31.12.1993
  மன்/இலுப்பைக்கடவை மகா வித்தியாலயம்
  (கணித/ விஞ்ஞான ஆசிரியர்)
- 01.01.1994 – 31.12.1995
  மன்/இலுப்பைக்கடவை மகா வித்தியாலயம்
  (கடமை நிறைவேற்று அதிபர்)
- 01.01.1996 – 20.09.1999
  மு/மல்லாவி மத்திய கல்லூரி
  ( ஆசிரியர், பகுதித்தலைவர்)
- 21.09.1999 – 07.11.2012
  வலயக்கல்வி அலுவலகம் – துணுக்காய்
  ஆசிரிய ஆலோசகர், உதவிக்கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்) ICT Cordinator, Emergency focal point (unicef) co- cordinator music care projector
- 08.11.2012 – 08.05.2026
  மு/ தென்னியன்குளம் அ.த.க பாடசாலை (அதிபர்)

எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றி 08.05.2026 நேற்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் திரு. செ.நவரெத்தினராசா அவர்களது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்– ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
மு/தென்னியன்குளம் அ.த.க பாடசாலை (2306)



மணிவிழா வாழ்த்து

திரு. கயிலைநாதன் கருணேஸ்வரன்
B.sc(Agri),PGDE, SLTS - I



சேவை விபரம்

- நீர்/ அல். பலாஹ் மகா வித்தியாலயம்
  (10.10.1994 – 31.12.2003)
- நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
  (01.01.2004 – 14.07.2013)
- தி.கோ/கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம்
  (15.07.2013 – 03.10.2019)
- யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தியாசாலை (பகுதி நேரம்)
  (10.10.2019 – 08.05.2026)
- யா/வைத்தீஸ்வரா கல்லூரி (பகுதி நேரம்)
  (10.10.2019 – 08.05.2026)

எமது கல்லூரியில் விவசாய விஞ்ஞான பாட ஆசானாய் சிறப்புடன் பணியாற்றி உள மகிழ்வுடன் பணி நிறைவு காணும் இந் நன்னாளில் உங்களை பாராட்டுவதோடு உங்கள் ஓய்வுகாலம் சிறப்புற அமைய இறை ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

(C-5596)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாரதம்

# சூடு பிடிக்கும் இந்திய அரசியல்



(சென்னை)

தமிழகத்தில் தேர்தலுக்குப் பிந்தைய இழுபறி மேலும் தீவிரமடைந்துள்ளது.

தி.மு.க அல்லது அ.தி.மு.க ஆகிய இரு கட்சிகளில் ஏதேனும் ஒன்று ஆட்சி அமைக்க முயன்றால், தங்களது 107 சட்டமன்ற உறுப்பினர்களும் மொத்தமாக இராஜினாமா செய்வார்கள் என விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அச்சுறுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

234 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் 108 இடங்களுடன் தமிழக வெற்றிக் கழகம் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த போதிலும், அரசு அமைப்பது குறித்த பேச்சுவார்த்தைகள் முடங்கியுள்ள நிலையில், விஜய்யின் முகாமில் பதற்றம் அதிகரித்து வருவதை இந்த நடவடிக்கை காட்டுகிறது.

காங்கிரஸ் மற்றும் அதன் ஐந்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன், தமிழக வெற்றி கழகத்திற்குத் தேவையான 118 இடங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

இதனால், சிறிய கட்சிகளும், சுயேச்சைகளும் இறுதி முடிவில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வருவதைத் தடுப்பதற்காக, தி.மு.க மற்றும் அ.தி.மு.க இடையே மறைமுகத் தொடர்புகள் இருந்ததாக வெளியான செய்திகளால் அரசியல் நிச்சயமற்ற நிலை மேலும் ஆழமடைந்துள்ளது. (நி)

## ஒரே குடும்பத்தினர் பலியான சம்பவம்

# தர்பூசணியில் எலி மருந்து கலப்பு தடயவியல் ஆய்வில் தகவல்



(மும்பை)

மஹாராஷ்டிராவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் பலியான சம்பவத்தில், அவர்கள் சாப்பிட்ட தர்பூசணியில் எலி மருந்து கலந்திருப்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

மஹாராஷ்டிரா தலைநகர் மும்பையில் உள்ள ஜே.ஜே.நகரைச் சேர்ந்தவர் அப்துல்லா (40). இவரது மனைவி நஸ்ரின் (35). இந்த தம்பதிக்கு ஜைனாப் (13), ஆயிஷா (16) என்ற இரு மகள்கள் இருந்தனர்.

கடந்த 26ஆம் திகதி அப்துல்லா குடும்பத்தினர் சிக்கன் பிரியாணி சாப்பிட்டனர். அதன்பின், வீட்டில் இருந்த தர்பூசணியை அவர்கள் சாப்பிட்டனர்.

அடுத்த சில நிமிடங்களில் வாந்தி உள்ளிட்ட உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்ட நால்வரும் மயங்கி விழுந்தனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, அவர்களில் சிறுமி ஆயிஷா ஏற்கனவே இறந்ததாக டாக்டர்கள் தெரிவித்தனர். மீதமுள்ளவர்களும் சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து உயிரிழந்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, இறந்தவர்களின் உடல் திசுக்களின் மாதிரிகள், அவர்கள் சாப்பிட்ட தர்பூசணி மாதிரிகளை தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தினர். இதன் முடிவில், "ஜிங்க் பாஸ்பைடு" எனப்படும் வீரியமிக்க எலி மருந்து இருந்தது தெரிய வந்துள்ளது.

விஷத்தன்மை வாய்ந்த இது தர்பூசணியில் எப்படி கலந்தது என்பது குறித்து, பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜிங்க் பாஸ்பைடு நேரடியாக நச்சை ஏற்படுத்துவதைவிட, உடலில் சென்ற பின் ஏற்படும் வேதியியல் மாற்றத்தால்தான் அதிக ஆபத்தை விளைவிக்கும் எனவும், இது வயிற்றில் உள்ள அமிலத்துடன் கலந்து, மிகக்கொடிய நச்சு வாயுவை வெளியிடும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வாயு, இரத்தத்தில் கலந்து இதயம், நுரையீரல் மற்றும் கல்லீரல் போன்ற முக்கிய உறுப்புகளின் செல்களை சிதைத்து, அவற்றின் செயற்பாட்டை முற்றிலும் நிறுத்தும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# நெதர்லாந்தில் ஆளும் கட்சி அலுவலகம் மீது குண்டுவீச்சு

(நெதர்லாந்து)

நெதர்லாந்து பாராளுமன்றத்தின் மிகப்பெரிய கட்சியான D66 கட்சியின் தலைமை அலுவலகத்தைக் குறிவைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தலைநகர் "தி ஹேக்" மையப்பகுதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் இரவு 9 மணியளவில் இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதல் குறித்து நெதர்லாந்து பிரதமரும் D66 கட்சியின் தலைவருமான ராப்ஜெட்டன்கருத்துத்தெரிவிக்கையில்,

"பட்டாசுகள் மூலம் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டு ஒன்று அலுவகைத்தின் கதவில் இருந்த தபால் பெட்டி வழியாக உள்ளே வீசப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாகச் சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்ட மத்தியவாத கட்சியான D66, கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தீவிர வலதுசாரிக் கட்சியான கீர்ட் வில்டர்ஸின் சுதந்திரக் கட்சியைத் தோற்கடித்து வியத்தகு வெற்றியைப் பெற்றது.


வலதுசாரி ஆதரவாளர்களால் "மேல்தட்டு முற்போக்காளர்களின் கட்சி" என விமர்சிக்கப்படும் D66 கட்சி மீது நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் அந்நாட்டு அரசியலில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சோமாலியாவில் இருமடங்காக அதிகரித்த கடும் பஞ்சம் மற்றும் பசிப்பிணி!

## மத்திய கிழக்குப் போரினால் தொடரும் அவலம்



(சோமாலியா)

**போர்ச் சூழல் மற்றும் ஹார்முஸ் மூடப்பட்டதன் விளைவாக எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன. இதன் காரணமாகப் பல்வேறு நாடுகளின் விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சோமாலியாவில் நிலவி வரும் கடும் பஞ்சம் மற்றும் பசிப்பிணி மேலும் மோசமடைந்துள்ளது.**

வறட்சி, மோதல்கள்
ற்றும் போதிய மனிதா
மான உதவிகள்
டைக்காதமை போன்ற
ரணங்களால், அண்
மக்கால வரலாற்றில்
சாமாலியா மிகவும்
க்கலான உணவு
நருக்கடியை எதிர்
கொண்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

கடந்த ஒரே ஆண்டில் மட்டும் சோமாலியாவில் பட்டினியால் வாடுவோரின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்து, தற்போது 6.5 மில்லியன் மக்கள் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர்.

இதில் இரண்டு மில்லியன் மக்கள் "அவசரக்கால பசி" எனும் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள உலக உணவுத் திட்டத்தின் சோமாலிய நாட்டு பணிப்பாளர் ஹமீத் நூரு, மக்கள் தங்களின் சிறிய சொத்துக்களை விற்பது, உணவைக் குறைப்பது அல்லது முற்றாகத் தவிர்ப்பது போன்ற மிகக் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கவலை வெளியிட்டுள்ளார்.

உதவி தேடித் தங்களின் இருப்பிடங்களை விட்டு வெளியேறும் குடும்பங்களுக்கு, தற்போது எவ்வித உதவியும் கிடைக்காத ஒரு இக்கட்டான சூழல் நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ஹாண்டியஸ் சுற்றுலா கப்பலில் ...றன்டா வைரஸ் தொற்று



...ர்ஜெண்டினா)

...ர்ஜென்டினாவிலிருந்து புறப்பட்ட
... ஹோண்டியஸ் சுற்றுலா கப்பலில்,
...டா வைரஸ் தொற்று பரவியுள்ள
...யில், அதிலிருந்து முன்னதாகவே
...யேறிய இரு பிரித்தானியர்கள்
...ாது தங்களைத் தனிமைப்படுத்திக்
...ண்டுள்ளனர்.

...ன்.ஹெலினா தீவில் கப்பலை விட்டு
...கிய இவர்கள், ஜொகன்னஸ்பர்க்
...ாக பிரித்தானியா திரும்பியுள்ளனர்.
...பலில் வைரஸ் பாதிப்பு இருப்பதை
...தவுடன் அவர்கள் அதிகாரிகளைத்
...ர்பு கொண்ட நிலையில், தற்போது
...றிகள் ஏதுமின்றி சுய தனிமைப்
...லில் உள்ளனர்.

...வர்களுடன் பயணத்தின்போது
...பில் இருந்தவர்களைக் கண்டறியும்
...யில் சர்வதேசச் சுகாதார அமைப்பு
...ன் இணைந்து பிரித்தானியச் சுகாதாரப் பாதுகாப்பு முகவரகம் ஈடுபட்டுள்ளது.

இதற்கிடையில், தற்போது கப்பலில் இருக்கும் மற்ற பிரித்தானியப் பயணிகள், அறிகுறிகள் இல்லாத பட்சத்தில் கேனரி தீவுகளில் இருந்து சிறப்பு விமானம் மூலம் தாயகம் அழைத்து வரப்பட உள்ளனர்.

அவர்கள் வைரஸ் பாதிப்பு காலத்தைப் பொறுத்து ஆறு வாரங்கள் வரை தனிமைப்படுத்தப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவுவது மிகவும் அரிது என்பதால், பொதுமக்களுக்குப் பெரிய அளவில் ஆபத்து இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் உறுதியளித்துள்ளது.

இருப்பினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பயணிகளைக் கண்காணிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், ஆர்ஜென்டினாவிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்பு புறப்பட்ட எம்.வி ஹோண்டியஸ் என்ற சுற்றுலா கப்பலில் ஹன்டா வைரஸ் தொற்று பரவியுள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வைரஸ் பாதிப்பால் கப்பலில் பயணம் செய்த மூன்று பேர் உயிரிழந்துள்ள நிலையில், தற்போது வரை மொத்தம் எட்டு பேருக்கு (3 உறுதிப்படுத்தப்பட்டவை, 5 சந்தேகிக்கப்படுபவை) தொற்று இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வைரஸின் தோற்றம் இன்னும் கண்டறியப்படாத நிலையில், பொதுவாக ஒரு மனிதரிடமிருந்து மற்றொருவருக்கு இந்த வகை வைரஸ் பரவுவது அரிது என்று சுகாதார நிபுணர்கள் விளக்குகின்றனர்.

இருப்பினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் பாதிப்பு கண்டறியப்படுவதற்கு முன்பே கப்பலில் இருந்து இறங்கிச் சென்ற பயணிகளைக் கண்டறியும் பணிகளில் பிரித்தானியா, சுவிட்சர்லாந்து மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொடரும் மயிலிட்டி போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமோண்டோ" பங்களா முன்பாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை, மூன்றாவது தடவையாகப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் J/256, J/248, J/251 மற்றும் J/255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜுன் மாத காலப்பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகிறது

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர் பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், நேற்றைய தினம் மூன்றாவது வெள்ளிக்கிழமையும் போராட்டத்தை முன்னெடுத்தனர். (3-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
7இல்செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: பட்டதாரி,விவசாயம்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16874

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்:சுவாதி
12இல்செவ்
கி.பா:18 1/2
உயரம்: 6"
தகைமை/தொழில்:BSc(QS), Cashier (London)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16875

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி-பா: 45
உயரம்:5'10"
தகைமை/தொழில்: BIT, Printing Shop
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்
தொ.இ: B/16876

பிறப்பு: 1987-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
12இல்செவ்
உயரம்:5'1"
தகைமை/தொழில்: BFA, Teacher
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/16877

பிறப்பு: 1992-இந்து
நட்சத்திரம்: பூரம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: O/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16881

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா: 29 1/2
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, Demo
எதிர்பார்ப்பு: தகுதியானஆண்(வெளிநாடு)
தொ.இ: G/16889

பிறப்பு : 2001 - இந்து
நட்சத்திரம்: உத்தரம்
7இல்செவ்
கி.பா: 56
உயரம்: 5'3"
தகைமை/தொழில் : A/L, Beautician
எதிர்பார்ப்பு : வெளிநாடு
தொ.இ: G/16507

பிறப்பு: 1996-இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: HND (Civil Engineering), Customer Care
எதிர்பார்ப்பு: தகுதியானஆண்
தொ.இ: G/16511

பிறப்பு: 2000-இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி-பா: 15
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc
எதிர்பார்ப்பு : பட்டதாரி
தொ.இ: G/16513

பிறப்பு:1998-இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, MSc (London)
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்
தொ.இ: G/16514

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 591

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# எனக்குள் நான்!

ஒரு பெரியவர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். "நீ ஒரு ஆளா? இரண்டு ஆளா?" என்றார். இப்படிக் கேட்டதும் அந்தப் பெரியவர் மேலேயே எனக்கு சந்தேகம் வந்துவிட்டது.

"அவர் இப்போது நிதானத்திலேதான் இருக்கிறாரா இல்லையா?" என்று! பார்ப்பது எல்லாம் இரண்டு இரண்டாக தெரிந்தால் அது சந்தேகத்துக்குரிய ஒரு விடயம்தானே? அதனாலே சந்தேகப்பட்டேன். இருந்தாலும் பெரியவர் மறுபடியும் கேட்டார் "நீ ஒருத்தனா?, இரண்டு பேரா." என்று. "நான் ஒரு ஆள்தான்!" என்றேன்.

"இல்லை! இப்படித்தான் நாம் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் ஒவ்வொருத்தருக்குள்ளேயும் மூன்று பேர் இருக்கிறோம்!" என்றார்.

தலையைப் பிச்சிக்கலாம் போல இருந்தது! இருந்தாலும் அதை வெளியிலே காட்டிக்கொள்ளாமல் "எப்படிங்க அது?" என்றேன்.

நம்மைப் பற்றி நாம் நினைத்துக் கொண்டிருக்கோமே.அது ஒரு விதம்! நம்மைப் பற்றி அடுத்தவங்க நினைக்கிறாங்களே.. அது ஒரு விதம்! நம்மைப் பற்றி நமக்கும் தெரியாமல் அடுத்தவர்களுக்கும் தெரியாமல் இருக்கிறது ஒரு விதம்! அதைப் பற்றி விபரமாகச் சொல்லணும் என்றால்.

என்னைப் பற்றி நான் எப்படி நினைத்துக்கொண்டிருக்கேனோ அது ஒரு மனிதன்!

என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ - அது ஒரு மனிதன்! இதைத் தவிர எனக்கும் தெரியாமல் உங்களுக்கும் தெரியாமல் எனக்குள்ளே ஒரு மனிதன் இருக்கிறான்!

ஆக ஒவ்வொருவருக்குள்ளேயும் மூன்று மனிதன் இருக்கிறான் என்பது அந்தப் பெரியவருடைய அபிப்பிராயம்!

இது ஒரு பக்கம் இருக்கட்டும். இன்னொரு பெரியவர் என்ன சொல்கிறார் என்றால் நம்மைப் பற்றியே நமக்குத் தெரியாத உண்மைகள் நான்கு விதம் என்கிறார்.

ஒன்று: நமக்கும் தெரியும் மற்றவர்களுக்கும் தெரியும்!

இரண்டு: நமக்குத் தெரியாது. மற்றவர்களுக்குத் தெரியும்!

மூன்று: நமக்குத் தெரியாது. மற்றவர்களுக்குத் தெரியும்!

நான்கு: நமக்கும் தெரியாது. மற்றவர்களுக்கும் தெரியாது.

இதை நன்றாக புரிந்துகொண்டால் கருத்து வேறுபாடு வராது. மனித நேயம் வளரும்!

முதல் விடயத்தை எடுத்துக்கொள்வோம். நமக்கும் தெரியும் அடுத்தவர்களுக்கும் தெரியும்.

உதாரணத்துக்கு நான் கொஞ்சம் குள்ளம் என்று வையுங்களேன்...! இது நமக்கும் தெரியும் அடுத்தவர்களுக்கும் தெரியும். இரண்டு பேருக்கும் தெரிந்த உண்மை இது! அதனாலே என்னைப் பற்றி யாராவது... அந்த ஆள் அவ்வளவு உயரம் கிடையாது! என்று சொன்னால் அதைத் தப்பா எடுத்துக்கக்கூடாது! இரண்டாவது விடயம். நமக்குத் தெரியும், அடுத்தவர்களுக்குத் தெரியாது.

ஒருவருக்குப் பரிசு கிடைக்கிறது. அதைப் பார்த்து நான் பொறாமைப்படுகிறேன்! இருந்தாலும் அதை வெளியிலே காட்டிக்காமல் முகத்திலே சிரிப்பை வரவழைத்துக்கொண்டு அவரைப் பாராட்டுகிறேன்! இது... எனக்குத் தெரியும் அடுத்தவர்களுக்குத் தெரியாது!

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது இந்த ரகம்.

மூன்றாவது விடயம். "நமக்குத் தெரியாது மற்றவர்களுக்குத் தெரியும்." கோபப்படுவது இதற்கு ஓர் உதாரணம்

நமக்குத் தெரியாத ஒரு குறையை அடுத்தவர்கள் சுட்டிக் காட்டும் போது நமக்குக் கோபம் வருகிறது! நான்காவது விடயம் என்னவென்றால் நமக்கும் தெரியாது மற்றவர்களுக்கும் தெரியாது! ஒருவன் எரிந்து விழுகிறான். அவனுக்கு இரத்த அழுத்தம்! அதனாலே அப்படி விழுகிறான்.

அவனுக்கு அது இருக்கு என்கிறது அவனுக்கும் தெரியாது. அடுத்தவனுக்கும் தெரியாது! அதனாலே அடுத்தவனும் பதிலுக்கு இவன்மேல் கோபப்படுகிறான்.

அதனாலே நாம் மனித நேயத்தோடு வாழவேண்டும் என்றால் நம்மையும் புரிந்து கொள்ள வேண்டும்! அடுத்தவர்களையும் புரிந்து கொள்ள வேண்டும். பகுத்தறிய வேண்டும் அதுதான் பகுத்தறிவு!

இந்தக் தகவலைக் கேட்டுவிட்டு நம் ஆள் ஒருவன் சொன்னான்.

"நீங்கள் சொல்வது எல்லாம் வாஸ்தவம் சார். அந்த நான்காவது விடயம் சொன்னீர்களே. அதை சரியாக புரிந்துகொள்ளாததினாலேதான். எனக்கும் என் சிநேகிதனுக்கும் நேற்று பெரிய சண்டையாகப் போனது!" என்றான்.

"என்னடா விடயம்?" என்றேன். "ஒரு நூறு ரூபா பணம் அதை யார் எடுத்துக்கொள்வது என்பதினாலே எங்களுக்குள்ளே தகராறு" என்றான். "இதிலே என்னப்பா தகராறு பணம் யாருடையதோ அவர்கள் எடுத்துக்க வேண்டியதுதானே!" என்றேன்.

"அது யாருடையது என்றது எனக்கும் தெரியாது அவனுக்கும் தெரியாது. அதனாலே தான் சார்" தகராறு என்கிறான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



வடக்கின் மாணவர்களை சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் நேரடியாக இணைக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட "Study In யாழ்ப்பாணம்" கல்வி நிறுவனத்தின் பிரமாண்ட திறப்பு விழா நேற்று யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் அமைந்துள்ள குறித்த நிறுவன வளாகத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது.

# மீன் சந்தை வியாபாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு

## பருத்தித்துறை நகர சபையில் கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மீன் சந்தை வியாபாரிகள் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் மற்றும் சந்தை நிர்வாகம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் காலை 10:30 மணியளவில் பருத்தித்துறை நகர சபையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர், செயலாளர் மற்றும் நகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மீன் சந்தை வியாபாரிகள் சார்பில் பெரும் எண்ணிக்கையிலானோர் பங்கேற்று தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கலந்துரையாடலின் போது, வியாபாரிகள் தாம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் வியாபாரிகளுக்கு மீனை பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான கூலரின் தேவை தொடர்பாக அதிகாரிகள் முன்னிலையில் விவரித்தனர்.

அத்துடன் தினசரி வியாபாரத்தின் போது எதிர்கொள்ளும் நிர்வாக ரீதியான நெருக்கடிகள், சுகாதார மற்றும் கழிவு முகாமைத்துவத்தில் உள்ள சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வியாபாரிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த தவிசாளர் மற்றும் செயலாளர், அவற்றுக்கான உடனடி மற்றும் நீண்டகால தீர்வுகள் குறித்து விரிவாக ஆலோசித்தனர்.

"வியாபாரிகளின் நியாயமான கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, சந்தை நடவடிக்கைகளை முறைப்படுத்தவும், பிரச்சினைகளைத் தீர்க்கவும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்," என நகர சபை தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சந்தை நடவடிக்கைகளை எவ்வாறு செம்மையாகக் கட்டுப்படுத்துவது மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் எழாமல் தவிர்ப்பது குறித்த முக்கிய தீர்மானங்கள் கூட்டத்தின் இறுதியில் எடுக்கப்பட்டன. (3)

# மணல் ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மணல் ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

குறித்த ஏல விற்பனைக்கான மணலினை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக பார்வையிடலாம் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (3)



## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 300 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 150 | 200 | -- | 300 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 | 200 | 150 | 140 |
| தக்காளி | 300 | 300 | 250 | 300 | 280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 | 200 | 110 |
| கோவா | 300 | 180 | 150 | 200 | 160 | 160 |
| கரட் | 250 | 400 | 400 | 400 | 350 | 320 |
| பூசணி | 100 | 80 | 100 | 100 | 70 | 50 |
| புடோல் | 200 | 180 | 150 | 300 | 180 | 250 |
| வாழைக்காய் | 120 | 80 | 100 | 100 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 400 | -- | 280 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 180 | 200 | 170 | -- |
| பாகற்காய் | 700 | 500 | 600 | 600 | 600 | 550 |
| வெண்டக்காய் | 300 | 200 | 200 | 300 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 400 | 300 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 300 | 280 | 300 | 300 | 300 | 250 |
| பீற்றூட் | 200 | 200 | 150 | 300 | 240 | 300 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 300 | 200 | 230 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 800 | 1000 | 700 | 600 |
| போஞ்சி | 600 | 600 | 800 | 600 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 150 | 250 | -- | -- |
| கீரை – 1 பிடி | 140 | 60-120 | 150 | 150 | -- | 110 |
| தேசிக்காய் | 450 | 450 | 600 | 400 | 500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 140 | 150 | 150 | 80-120 | -- | 90 |
| இராசவள்ளி | 300 | 400 | 400 | 300 | -- | 350 |
| வெங்காயப்பூ | 450 | 600 | 1000 | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 160 | 200 | 300 | -- | 250 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 150 | 80 | -- | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | -- | 50 |
| ஈரப்பலா | 80 | -- | 200 | -- | -- | 110 |


# இராசிபலன்

09.05.2026
சித்திரை 26, சனிக்கிழமை
சப்தமி முற்பகல் 10.27 மணிவரை


திருவோணம் முன்னிரவு 7.57 மணிவரை
சுப நேரம் 2.54-4.24 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24 மணிவரை
நடேசர் அபிசேகம்

சந்திராஷ்டமம்:புனர்பூசம், பூசம்


வளவன்


மேஷம்


வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.


கடகம்


நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம்பெறலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.


துலாம்


காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.


மகரம்


ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.


ரிஷபம்


குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


சிம்மம்

மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் மேலோங்கும், தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள், உற்சாகமான நாள்.


விருச்சிகம்

சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வளர்ச்சி கூடும் நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் கைகூடும், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.


மிதுனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்வு அவசியம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், ரோக பயமுண்டு.


கன்னி

பொது வாழ்வில் புகழ் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.


தனுசு

தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாக்குமேன்மையுண்டு, உற்சாகமான நாள்.


மீனம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

மனிதனுக்குள்ளே உறங்கும் விலங்கு பொறாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

1040





நெடுங்காலத்துக்கு முன்பு அவரால் அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலக்கப்பட்ட பரமேச்சுவரனா அவன்? இருக்கட்டும் இவர்கள் மேலும் என்ன பேசுகிறார்கள் கேட்கலாம்.

“ரவிதாஸா! நீ இப்படித்தான் வெகு காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாய். ‘நாள் நெருங்கிவிட்டது’ ‘யமன் நெருங்கிவிட்டான்’ என்றெல்லாம் பிதற்றுகிறாய்? யமன் வந்து யார் யாரையோ கொண்டு போகிறான்! ஆனால் மூன்று வருடங்களாகப் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் சுந்தர சோழனைக் கொண்டு போவதாக இல்லை. அவனுடைய குமாரர்களையோ, யமன் நெருங்குவதற்கே அஞ்சுகிறான். ஈழநாட்டில் நாம் இரண்டு பேரும் எத்தனையோ முயன்று பார்த்தோமே?”

“அதனால் குற்றமில்லை, அப்பனே! யமதர்மராஜன் உன்னையும் என்னையும் விடப் புத்திசாலி! மூன்று பேரையும் ஒரே தினத்தில் கொண்டு போவதற்காக இத்தனை காலமும் காத்துக் கொண்டிருந்தான். அந்தத் தினம் நாளைக்கு வரப் போகிறது. நல்ல வேளையாக, நீயும் இங்கே வந்து சேர்ந்தாய்! சரியான யமதூதன் நீ! ஏன் இப்படி நடுங்குகிறாய்! கொள்ளிட வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டாயா? படகு கொண்டு வந்து வைத்திருக்கிறாய் அல்லவா?”

“வைத்திருக்கிறேன், ஆனால் படகை வெள்ளமும் காற்றும் அடித்துக்கொண்டு போகாமல் காப்பாற்றுவது பெரும் பாடாய்ப் போய் விட்டது! உன்னை இத்தனை நேரம் எங்கெல்லாம் தேடுவது? ரவிதாஸா! ஏன் என் உடம்பு நடுங்குகிறது என்று கேட்டாய் அல்லவா? சற்று முன்னால், யமதர்மராஜனை நான் நேருக்கு நேர் பார்த்தேன். இல்லை, இல்லை யமனுக்கு அண்ணனைப் பார்த்தேன். அதனால் சற்று உண்மையிலேயே பயந்து போய் விட்டேன்”

“பரமேச்சுவரா! என்ன உளறுகிறாய்? யமனாவது, அவன் அண்ணனாவது? அவர்களைக் கண்டு உனக்கு என்ன பயம்? அவர்கள் அல்லவோ உன்னைக் கண்டு அஞ்ச வேண்டும்?”

ரவிதாஸன் மற்றவனைப் ‘பரமேச்சுவரன்’ என்று அழைத்ததும் பழுவேட்டரையர் துணுக்குற்றார். தாம் சந்தேகப்பட்டது உண்மையாயிற்று! யமதர்மனுடைய அண்ணன் என்று அவன் குறிப்பிட்டது தம்மைத்தான் என்பதையும் அறிந்து கொண்டார். அவனை உடனே நெருங்கிச் சென்று கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொல்ல வேணுமென்று அவர் உள்ளமும் கைகளும் துடித்தன. மேலும் அவர்களுடைய பேச்சைக் கேட்க வேணும் என்ற ஆவலினால் பொறுமையாக இருந்தார். நந்தினியைப்பற்றி அவர்கள் இன்னும் பேச்சு எடுக்கவில்லை.

சுந்தர சோழரின் குடும்பத்துக்கே நாளை யமன் வரப் போகிறான் என்று மந்திரவாதி கூறியதன் கருத்து என்ன? உண்மையிலேயே ஜோதிடம் பார்த்துச் சொல்கிறானா? இவனுடைய மந்திர சக்தியைப் பற்றி நந்தினி கூறியதெல்லாம் உண்மைதானோ? ஒரு வேளை இவன் கூறுகிறபடி தெய்வாதீனமாக நடந்து விட்டால்? தம்முடைய நோக்கம் நிறைவேறுவது எளிதாகப் போய் விடும்! சோழ சாம்ராஜ்யத்தைப் பங்கீடு செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது! ஆனால் இந்தப் பரமேச்சுவரன்?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அன்பு மணியின் அப்பா



(நேற்றைய தொடர்ச்சி..)

மகாதேவர், “குழந்தைகளா, நீங்கள் எல்லோரும் ஒழுங்காக வரிசையில் நில்லுங்கள். ஒவ்வொருவராக வந்து வாங்கிக் கொள்ளுங்கள் ” என்றார். ஏழைக் குழந்தைகள் வரிசையாக நின்றனர். வேலைக்காரன் ஒரு சீன வெடிக் கட்டு, இரண்டு மத்தாப்பூ பெட்டிகள், இரண்டு கம்பிவாணங்கள் முதலியவற்றை எடுத்து மகாதேவரிடம் கொடுத்தான். அவர் அவற்றை வாங்கி வரிசையில் வந்த ஒரு பையனிடம் அளித்தார். அவன் வாங்கிக் கொண்டு ஒரு கும்பிடு போட்டுவிட்டுச் சென்றான். இன்னொரு பையன் வந்தான். அவனுக்கும் அப்படியே கொடுத்தார். இப்படியே அங்கு வந்திருந்த எல்லாக் குழந்தைகளுக்கும் சீன வெடி, மத்தாப்பூ பெட்டி, கம்பி வாணம் முதலியவற்றை அவர் கொடுத்தார். எல்லோரும் வாங்கிக் கொண்டு போய் விட்டனர். மகாதேவர், மீதத்தை உள்ளே வைக்கும்படி வேலையாளிடம் கூறி விட்டு, அன்புமணியுடன் மேல் மாடிக்குச் சென்றார்.

மாடியிலிருந்த விளக்கின் ‘ஸ்விச்’சைத் தட்டிவிட்டார். பிறகு அங்கிருந்த விசுப்பலகையின் மீது அமர்ந்தார். அன்புமணி அவர் அருகிலே உட்கார்ந்தான்.

மகாதேவர் வருடா வருடம் தீபாவளிக்கு முதல் நாள், அன்று செய்ததைப் போல நிறையப் பட்டாசுகளை வாங்கிக் கொண்டு வருவார் அவற்றை ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுப்பார். இதைப் பல ஆண்டுகளாக அன்புமணி பார்த்து வந்தான்.

ஆனால், அவர் ஏன் இப்படிச்செய்கிறார் என்பது மட்டும் தெரியாது! ஏழைகளின் மீது இருக்கும் இரக்கத்தால் இவ்விதம் செய்கிறார் என்று முதலில் நினைத்தான். பிறகு இதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கவேண்டும் என்று எண்ணினான். அதைப் பலமுறை, அப்பாவிடம் கேட்க நினைத்தான். ஆனால் கேட்கவில்லை! இன்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா?’ என்று நினைத்துக் கொண்டிருந்தான்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈழத் தமிழர்களை கவனிக்காத மு.க.ஸ்டாலின் போல விஜயும்...

ஈழத் தமிழர்களின் அவலம் பற்றி அறவே கதைக்காத தமிழ்நாட்டு மாநில அரசு ஒன்று இருந்ததென்றால், அது மு.க.ஸ்டாலினை முதலமைச்சராகக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக்கழகம் என அறுதியிட்டுக் கூற முடியும்.

உண்மை. எம்.ஜி.ஆர், கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா போன்றவர்கள் முதலமைச்சர்களாக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தனர். அதன் காரணமாக தமிழக அரசை நாம் மலையாக நம்பினோம்.

எனினும் அந்த நம்பிக்கையை 2009இல் கலைஞர் கருணாநிதி நமக்காக நடத்திய உண்ணாவிரத நாடகம் பலமிழக்கச் செய்தது.

பரவாயில்லை. அது கூட அந்நேரத்தில் கலைஞர் கருணாநிதி தன் வயோதிபம் காரணமாக ஏதோ முடிந்ததைச் செய்கிறார் என்றே நாம் கருதினோம்.

ஆனால் மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக இருந்தபோது; ஈழத் தமிழர்கள் பற்றி அவர் இம்மியும் சிந்திக்கவில்லை – கதைக்கவில்லை.

இதற்குக் காரணம் அவர் காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்திருந்ததுதான். இருந்தும் தமிழக சட்ட சபைத் தேர்தலுக்கு முன்னதாக திமுகவின் வெற்றியின் பொருட்டு தொல்.திருமாவளவன் ஒரு நாடகத்தைத் தயார் செய்தார்.

ஆம், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தொல்.திருமாவளவன்; தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்களை தமிழகத்துக்கு அழைத்து முதலமைச்சர் ஸ்டாலினைச் சந்திக்க வைத்தார்.

என்ன செய்வது தோற்க இருக்கின்ற ஒரு முதலமைச்சரை தேர்தல் காலத்தில் நம்மவர்கள் சந்திக்க வேண்டியதாயிற்று. இதுபற்றி இவ்விடத்தில் ஏலவே பிரஸ்தாபித்திருந்தோம்.

தமிழகத்தின் தேர்தல் களம் முடியட்டும் அதன்பிற்பாடு தமிழக முதல்வரைச் சந்திக்கலாம் என்று கூறுவதுதான் பொருத்தம் என்றும் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

சரி ஏதோ நடந்தாயிற்று என்றிருக்க, இப்போது விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் 108 ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்தாலும் ஆட்சியமைப்பதற்கு அந்த ஆசனங்கள் போதுமானதாக இல்லை.

இங்குதான் த.வெ.க.தலைவர் விஜய் பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அதிமுகவின் ஆதரவைப் பெறுவதற்கு முற்பட்டிருக்க வேண்டும்.

எனினும் காலப்பிழை போல திமுகவுடன் கூட்டுச் சேர்ந்த – வெறும் ஐந்து ஆசனங்களைக் கொண்டுள்ள காங்கிரஸின் ஆதரவைக் கோர, அது முதலமைச்சராக விஜய் பதவியேற்பதற்கான வழிப்பாதையைத் தடை செய்தது.

தவிர, காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் தமிழக அரசை விஜய் ஆளுவாராக இருந்தால், அவரும் நம் ஈழத் தமிழர் தொடர்பில் பேசாதிருக்கும் வியூகத்தையே அமைத்துக் கொள்வார்.

ஆக, பிரதமர் மோடியின் ஆதரவைப் பெற்ற தமிழக மாநில அரசால் மட்டுமே எங்கள் தொடர்பில் குரல் கொடுக்கவும் தீர்வுத் திட்டத்தை வலியுறுத்தவும் முடியும் என்பது நிறுதிட்டமான உண்மை.

## பண்டத்தரிப்பில் இளைஞன் மீது குழுவொன்று சுற்றிவளைத்துத் தாக்குதல்

### மடக்கிப்பிடித்த பொலிஸ் உத்தியோகத்தர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் குழுவொன்றினால் தாக்கப்பட்ட இளைஞன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இளைஞன் தாக்கப்பட்ட போது ஏராளமான பொதுமக்கள் சுற்றிநின்று வேடிக்கை பார்த்த போது, அந்தப் பகுதியால் சிவில் உடையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துணிச்சலாகச் செயற்பட்டு, தாக்கப்பட்ட இளைஞனைக் காப்பாற்றியதுடன் தாக்குதல் நடத்தியவர்களை விரட்டிச் சென்று ஒருவரை மடக்கிப் பிடித்தார். நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இளைஞன் ஒருவரை 3 பேர் கொண்ட குழுவொன்று சுற்றிவளைத்து கடுமையாகத் தாக்கியுள்ளது. தலைக்கவசத்தினால் தாக்கப்பட்ட இளைஞன் கடுமையான காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

பண்டத்தரிப்பு நகரத்தில் நடந்த இந்தச் சம்பவத்தை ஏராளமான பொதுமக்கள் சுற்றிநின்று வேடிக்கை பார்த்துள்ளனர்.

கடமை முடித்து சிவில் உடையில் சென்றுகொண்டிருந்த இளவாலைப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தரான மதுராஜ், இந்த மோதல் சம்பவத்தை அவதானித்து விரைவாக செயற்பட்டு தாக்கப்பட்ட இளைஞனைக் காப்பாற்றியுள்ளார்.

பின்னர் தாக்குதலில் ஈடுபட்ட இளைஞர்களை விரட்டிச் சென்று ஒருவனை மடக்கிப் பிடித்துள்ளார்.

மடக்கிப் பிடிக்கப்பட்ட இளைஞன் இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். தாக்கப்பட்ட இளைஞன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,60)

## சத்தாரத்தன தேரர் கைது

(கொழும்பு)

மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ரஜங்கனே சத்தாரத்தன தேரர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோருக்குச் சமூக வலைத் தளங்கள் வாயிலாக அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கைக்குக் காரணமான இணையவழி காணொளிகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, ரஜங்கனே சத்தாரத்தன தேரரைப் பௌத்த மத பீடத்திலிருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா ராமஞ்ஞ மகா நிகாய குழு கடந்த ஆண்டு நடவடிக்கை எடுத்திருந்தது.

அவர் நடத்தி வந்த யூடியூப் தளத்தில் வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட உள்வாரி விசாரணைகளைத் தொடர்ந்தே, அவரைச் சங்க அமைப்பிலிருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

## மஞ்சத்தடி முருகனின் தீர்த்தோற்சவம் இன்று

(இணுவில்)

இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாத சிவசுப்ரமணிய சுவாமி (மஞ்சத்தடி முருகன்) ஆலய வருடாந்த திருவிழாவில் இன்று (09) சனிக்கிழமை தீர்த்தோற்சவமானது பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

உலகப்புகழ் பெற்ற "இணுவில் உலகப் பெருமஞ்சத்தை" உருவாக்குவதற்கு மூலகாரணமாக இருந்தவரும் சிறந்த சித்த புருஷருமான பெரிய சந்நியாசியார் அவர்களின் சமாதியின் மேல் இத்தலம் அமையப்பெற்றுள்ளது.

பெரிய சந்நியாசியார் அவர்கள் மகா சமாதியடைந்த தினமான சித்திரை மாத திருவோண நட்சத்திரத்தை தீர்த்த தினமாகக் கொண்டே இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வெவ்வேறு பகுதிகளில் இருவர் படுகொலை

(கொழும்பு)

நாட்டின் இரு வேறு பகுதிகளில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிட்டிகல, ஹொரங்கல்ல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி 60 வயதுடைய நபர் ஒருவர் நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கு இடையே ஏற்பட்ட தகராறு முற்றியதாலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதுடன் இதன்போது காயமடைந்த சந்தேகநபர் ஒருவர் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேபோல் திஸ்ஸமஹாராம - கெமுனுபுர பகுதியில் வீடொன்றுக்குள் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் உடலில் வெட்டுக்காயங்கள் காணப்படுவதுடன் கொலையைச் செய்த சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் கெமுனுபுர பகுதியைச் சேர்ந்த 88 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## இணுவில் அறிவாலயத்தில் " சித்திரைப் புத்தாண்டு " சிறப்பு இசை அரங்கு

(இணுவில்)

யாழ்ப்பாணம் இணுவில் அறிவாலயத்தின் ஏற்பாட்டில் வருடாந்தச் சித்திரைப் புத்தாண்டு சிறப்பு இசை அரங்கானது இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இணுவையூர் மண்ணின் பெருமைமிகு கலைஞரான அழகேசனின் மைந்தர்களான அ. அமிர்தலோஜனன் மற்றும் அ. அமிர்த சிந்துஜன் ஆகியோரால் குறித்த இசையரங்கு அரங்கேற இசை அரங்கிற்கு மெருகூட்டும் வகையில் வயலின்: கே. வேலதீபன், மிருதங்கம்: க. கஜன், கஞ்சிரா: நா. சிவசுந்தரசர்மா, முகர்சிங்: சீ. செந்தூரன், கடம்: கு. ரவிசங்கர் ஆகிய பக்கவாத்தியக் கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

அறிவாலயத்தின் உப தலைவர் சுதந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகப் பிரபல தொழிலதிபரும் பஷன் ஹவுஸ் உரிமையாளருமான த. கந்தசாமி அவர்களும், சிறப்பு விருந்தினராக பிரித்தானியாவிலிருந்து வருகை தந்துள்ள 'அறிவு அறக்கட்டளை' நிறுவனர் திரு. பதஞ்சலி நவேந்திரன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாணத்தில் கண்களுக்கு தெரியாத ஒரு நீர் நெருக்கடி: பூமிக்கடியில் மெதுவாக உருவாகிக் கொண்டிருக்கிறது

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

(01.01.2026 தொடர்ச்சி)

சிறிய தீவுகளில் மக்கள் தொகை அதிகரிப்பும், தொழில்நுட்பம், கட்டட அமைப்புக்கள் அதிகரிப்பாலும் கிணற்றில் வாளிகளால் நீர் அள்ளி பாவித்தது போய், அதிகூடிய வலுவான மோட்டார்களை பாவித்து நிலத்தடி நீரை வெளியே எடுத்தலும் கடல் நீர் தடுப்பு முறைகள் ஒழுங்காக பராமரிக்கப்படாமையாலும். பாதுகாப்பற்ற மலசலகூட முறைகளால் கழிவுகள் நிலத்தடி நீருடன் சேர்த்தலும் அவதானிக்கப்பட்டுள்ளது.




Figure: well in Jaffna Peninsula

விவசாய தோட்ட, வயல் நிலங்களுக்கு பயன்படுத்தப்படும் செயற்கை உரங்களாலும் எமது நீரின் தரத்திற்கும். பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீரில் நைதரசனின் அளவும் கூடிக் கொண்டு வருவதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள்.

யாழ் குடாநாட்டு பகுதிகளில் எவ்விதமான கட்டுப்பாடுகளின்றி குடிமனைகளுக்கருகில் வாகன சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுமதியினை வழங்கி அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்கள் எவ்வாறு, எங்கே வெளியற்றப்படுகின்றன என்ற கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடாமல் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் செயற்படுவது கவலைக்குரிய விடயம். வாகன சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர் அருகில் உள்ள வாய்க்கால்களிலும் நிலத்தினுள்ளும் வெளியேற்றப்படுவது தான் உண்மை. அண்மையில் சுன்னாக கழிவு ஓயில் பிரச்சினை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

பண்டைய காலங்களில் தூரநோக்கு சிந்தனையுடன் அமைக்கப்பட்ட குளங்களின் இன்றைய நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது. குளங்களும் குளக்கரைகளும் தான் குப்பைகளை வீசுவதற்கு இலகுவான குப்பைத் தொட்டிகளாக மாறிவிட்டன. குளங்களுக்கு அருகில் உள்ள சில வீடுகளில் மலசலகூடக்குழிகள் குளத்தின் அருகே அமைக்கப்பட்டுள்ளது என்பது வேதனை தரும் உண்மை.

இவ்வாறான பல்வேறு காரணங்களால் நீரின் தரம் மற்றும் நீண்டகால நிலைத்தன்மை குறித்து கவலைகளை எழுப்பியுள்ளது. காலநிலை மாற்றத்தால் மூன்று மாதமாக பெய்ய வேண் டிய மழை பத்து நாட்களில் கொட்டித் தீர்த்து விடுகின்றது. இதனால் வெள்ளம் ஏற்பட்டு, இந்நீரை பயன்படுத்த முடியாது வெளியேறி கடலுடன் சேர்ந்து விடுகின்றது.

இதை தொடர்ந்து கோடை காலங்களில் வறட்சி ஏற்படுகின்றது. வறண்ட காலங்களில் சுத்தமான நீர் கிடைப்பது அரிது. அது மட்டுமின்றி குறிப்பாக யாழ் குடாநாட்டின் பல நீர் ஏந்து பிரதேசங்கள் என்று தெரிந்தும் அத்தகைய இடங்களில் வீடுகளை அமைத்து விட்டு மழைகாலங்களில் வீடுகளுக்குள் நீர் வந்துவிட்டது எனக் கூறி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது இன்றைய சமூகத்தில் வழக்கமாகியுள்ளது.

கனமழையின் போது தெருக்களில் வெள்ளம் சேர்வதும், மாசடைந்த நீர் கிணறுகளினுள் உட்புகுவதும், குடிநீர் மாசடைவதும். தொற்று நோய்கள் பரவுவதும் சந்த முறையில் நடைபெறுகின்றது. இதற்கு முறையான வடிகால் மற்றும் கழிவுநீர் அமைப்பு இல்லாததும் நீர்ப் பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்துகின்றது.

இதை சமாளிக்க நாம் நீரை பாதுகாக்கவும், சிக்கனமாக பயன்படுத்தவும் வேண்டும். மழைநீர் சேகரிப்பு. நீர் நிலைகளை பாதுகாத்தல், மரங்களை நடுதல் போன்ற செயல்கள் மூலம் நீர் வளத்தை காக்க வேண்டும். எம்மிடம் அனைத்து வளங்களும் இருந்தும் அதை உரியமுறையில் கையாளப்படாமையால் எமது பிரதேசம் பின்தங்கி உள்ளது. நாம் எமது நீர்வளத்தை உரிய திட்டமிடல் இன்றியும், முறையாக பயன்படுத்தாமலும் இருக்கின்றோம். நீண்ட கால பாதுகாப்பான நீர் தீர்வு என்பது பல நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த அமைப்பு ஆக வேண்டும்.

நிலத்தடி நீர் எடுத்தல் கட்டுப்பாடாக இருத்தலுக்காக பெரிய விவசாய கிணறுகள், பதிவு செய்யப்பட வேண்டும். பம்பிங் அளவுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். குழாய் கிணறுகளை அமைப்பதற்கான அனுமதிகளை மட்டுப்படுத்தல் வேண்டும்.

மழைநீர் சேமிப்புக்காக வீடுகளில் மழைநீர் சேகரிப்பு மிகவும் முக்கியம். இதனால் குடிநீர் தேவையின் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படுவதுடன், நிலத்தடி நீர் மீது உள்ள அழுத்தம் குறைவடையும். யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமாக இருந்த குளங்கள் மற்றும் ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டு மறுசீரமைப்பு செய்யப்படுவதன் மூலம் மழைநீர் சேமிப்பு அதிகரிக்கும். வடமாகாணத்தில் கிடைக்கின்ற மழைநீரை குளங்களில் சேமித்து வைக்க சரியான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

கடல் நீர் உட்புகுதலை கட்டுப்படுத்த உவர்நீர் தடுப்பணைகளை (Barrage with slice gate) இடல் வேண்டும். நகர்ப்புறங்களில் நீர் மறுசுழற்சிக்கு உள்ளாக்கப்பட, கழிவு நீர் முகாமைத்துவம், குடிநீர் முகாமைத்துவம் போன்றன சீராக செயற்படுத்தப்பட வேண்டும்.

நீர் வளத்தின் தரம், அளவு ஆகிய இரண்டும் மிகவும் முக்கியமானவை. எனவே கிடைக்கின்ற நீரை, இயன்றளவு பயன்படுத்தக் கூடிய வகையில் சேமித்து உச்ச பயன்பாட்டைப் பெற உரிய செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இனிவரும் காலங்களில் நீர்வள திட்டமிடலில் கவனம் செலுத்துவதுடன் விவசாயத்திற்கு சொட்டு நீர்ப்பாசனம், மழை நீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர் முகாமைத்துவம் போன்ற நவீன பயன்பாட்டு உத்திகளையும் கையாளுதல் மூலம் நீர் வீணாவதை தடுக்க முடியும்.

**உலக தண்ணீர் தினம் 2026**

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 22 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படும் world Water Day இந்த ஆண்டில் **"Water and Gender"** (நீர் மற்றும் பாலினம்) என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டுள்ளது. **"Where water flows, equality grows"** (நீர் பாயும் இடங்களில் சமத்துவம் வளரும்) என்ற முழக்கத்துடன், பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளுக்கான



Figure: Thondamanaru lagoon

அணுகலில் உள்ள பாலின சமத்துவமின்மையை நீக்குவதன் அவசியத்தை இந்த நாள் வலியுறுத்துகிறது. உலகளாவிய நீர் நெருக்கடி அனைவரையும் பாதித்தாலும், பெண்கள் மற்றும் சிறுமிகள் அதிகளவில் அதன் தாக்கத்தை அனுபவிக்கின்றனர். உலகின் பல கிராமப்புறப் பகுதிகளில், குடும்பத்திற்கான குடிநீரை பெற்றுத் தரும் பொறுப்பு பெரும்பாலும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் மேல் இருக்கிறது. நீண்ட தூரம் நடைப்பயணம் செய்து தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை அவர்களின் கல்வி, உடல் நலம் மற்றும் சமூக முன்னேற்றத்தையும் பாதிக்கிறது. எனவே நீர் முகாமைத்துவம் மற்றும் நீர் நிர்வாகத் திட்டங்களில் பெண் களின் பங்கு மற்றும் தலைமைத்துவம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த ஆண்டின் உலக நீர் தினம், United Nations நிர்ணயித்த Sustainable Development Goal 6 என்ற இலக்கை நினைவூட்டுகிறது. அதாவது 2030 ஆம் ஆண்டிற்குள் **"அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரம்"** கிடைக்கச் செய்வதே உலகளாவிய நோக்கமாகும்.

ஒரு சமூகத்தின் முன்னேற்றம் அதன் இயற்கை வளங்களின் சரியான பயன்பாட்டினைப் பொறுத்து அமைகிறது. அவற்றில் முக்கியமானது நீர் வளம் குடிநீர், விவசாயம், சுகாதாரம் மற்றும் தொழில் போன்ற பல துறைகளுக்கும் நீர் அவசியமானது. நீர் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கும் இடங்களில் மக்கள் வாழ்க்கைத் தரம் உயர்கிறது. ஆனால் நீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். குறிப்பாக ஏழை மக்கள் மற்றும் கிராமப்புற மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள்.

தமிழர் பாரம்பரியத்தில் நீர் முக்கியத்துவம் மிகுந்ததாக இருந்தது. பழங்கால அரசர்கள் குளங்கள், ஏரிகள் மற்றும் கால்வாய்களை அமைத்து மழைநீரைச் சேமித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர். இந்த நீர்ப்பாசன முறைகள் விவசாய வளர்ச்சிக்கும் சமூக நலத்திற்கும் பெரும் உதவியாக இருந்தன. இதன் மூலம் அனைவருக்கும் சமமாக நீர் கிடைத்ததால் சமூகத்தில் சமத்துவமும் ஒற்றுமையும் நிலைத்திருந்தது.

நீர் என்பது சிலருக்கே உரிய சொத்து அல்ல. அது அனைவருக்கும் பொதுவான இயற்கை வளமாகும். ஆகவே, நீர் வளம் சமமாக பகிரப்பட்டு அனைவருக்கும் கிடைக்கின்ற போது சமூகத்தில் சமத்துவம், ஒற்றுமை மற்றும் முன்னேற்றம் வளர்ச்சியடையும்.

தமிழ் இலக்கியத்தில் திருவள்ளுவர் கூறியுள்ள **"நீரின்றி அமையாது உலகு"** என்ற வாக்கு இன்று மேலும் பொருத்தமுடையதாக இருக்கிறது. மழைநீர் சேகரிப்பு, நீர் மறுசுழற்சி, தண்ணீர் வீணாவதைத் தடுக்கும் பழக்கங்கள் போன்ற நடைமுறைகள் மூலம் நீர் வளங்களை பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும். குறிப்பாக கிராமப்புறங்களில் பெண்களின் பங்களிப்புடன் நீர் முகாமைத்துவம் நடவடிக்கைகளை முன்னெடுத்தால், சமூக மட்டத்தில் நிலையான நீர் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.

உலக நீர் தினம் 2026, நீர் வளங்களை பாதுகாப்பதற்கும், பாலின சமத்துவத்தை முன்னேற்றுவதற்கும், எதிர்கால சந்ததியினருக்கான பாதுகாப்பான நீர் வளத்தை உருவாக்குவதற்கும் உலக மக்களை ஒன்றிணைக்கும் ஒரு முக்கிய நினைவு நாளாகத் திகழ்கிறது.

உலக நீர் தினத்தை அனுசரிக்கும் இந்த நேரத்தில், பண்பாட்டு செழுமைக்காக புகழ்பெற்ற யாழ்ப்பாணத்தில் கண்களுக்கு தெரியாத ஒரு நீர் நெருக்கடி பூமிக்கடியில் மெதுவாக உருவாகிக் கொண்டிருக்கின்றது.

(முற்றும்)

திருமதி பிரதீபா சிவகுமார்
(தலைவர் & சிரேஸ்ட விரிவுரையாளர்)
திருமதி கிருஷ்ணப்பிரியா நிரஞ்சன்
(பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
விலங்கியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ இலட்சம்
அதிர்ஷ்டம் வெல்லப்பட்டுள்ளது

07.05.2026 அன்று அபிவிருத்தி லொத்தர் சபை (DLB) சசிரி மூலம் ரூபாய் **2 இலட்சம்** அதிர்ஷ்டம் வெல்லப்பட்டுள்ளது.

விற்பனை முகவர்:- கனகலிங்கம் திலகவதி
யாழ்.மடத்தடி பெற்றோல் பங்குக்கு அருகாமை, யாழ்ப்பாணம்.

சசிரி SASIRI 200,000/=
12 17 31
2026/05/07

(2307)


## பெரும்பான்...

பதற்கு ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதன்படி தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக த.வெ.கவின் தலைவர் விஜய் இன்று பதவியேற்கவுள்ளார்.

நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில், தனிப்பெரும் கட்சியாக 108 ஆசனங்களை தவெக பெற்றிருந்தது. இதன்படி ஆட்சி அமைப்பதற்கு உரிமை கோரி இரண்டு முறை ஆளுநரைச் சந்தித்து விஜய் அனுமதி கோரிய போதிலும் பெரும்பான்மை இல்லாததால் அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டது.

இதனையடுத்து ஆட்சியமைப்பதற்கு 118 ஆசனங்கள் தேவைப்பட்ட நிலையில் காங்கிரஸ் 5, கமினியூட்ஸ் கட்சிகள் 4, முஸ்லிம் லீக் கட்சி 2 மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் 2 என மொத்தம் 121 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்நிலையில் தமிழக முதலமைச்சராக இன்று காலை 11 மணிக்கு விஜய் பதவியேற்கவுள்ளார். (ம-7)

## வாரத்தில்...

ஈடுபடவுள்ளது.

இச்சேவையானது எதிர் வரும் (11.05.2026) திங்கட்கிழமையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறித்த தினங்களில் கொழும்பிலிருந்து காலை 6.40 மணிக்கு புறப்பட்டு வவுனியாவை 11.36 மணிக்கும் கிளிநொச்சி நகரத்தை 12.51 மணிக்கும் யாழ்ப்பாணத்தை 1.59 மணிக்கும் வந்தடையும் புகையிரதம் இறுதியாக 2.33 மணிக்கு காங்கேசன்துறையைச் சென்றடையும்.

அவ்வாறே எதிர்வரும் செவ்வாய்க்கிழமையிலிருந்து (12.05.2026) திகதியிலிருந்து காங்கேசன் துறையில் ஆரம்பிக்கும் புகையிரதச் சேவையானது யாழ்ப்பாணத்தில் 11.00 மணிக்கும் கிளிநொச்சியில் 12.14 மணிக்கும் வவுனியாவில் 1.35 மணிக்கும் சென்றடைந்து இறுதியாக கொழும்புக் கோட்டையை 07.03 மணிக்குச் சென்றடையும்.

இப்புகையிரதத்திற்கான கட்டணங்கள் சாதாரண கட்டணங்களாகவே அறவிடப்படவுள்ளன.

இவற்றைத் தவிர வழமை போன்று முதலாம், இரண்டாம் வகுப்பு ஆகிய வற்றிற்கான ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளக்கூடிய தாக இருக்கும் என யாழ்ப்பாண பிரதான புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி தி.பிரதீபன் தெரிவித்தார். (ம-7,33)

## யாழ்.குடாநாட்டில்...

காலநிலை சற்றுத் தணிந்து, நேற்று வெள்ளிக்கிழமை மதிய வேளையில் யாழ்.நகர் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இதமான மழை பொழிந்துள்ளது.

குடாநாட்டின் புறநகர்ப் பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வந்த போதிலும் யாழ்.மாநகரப் பகுதியை அண்மித்த இடங்களில் நேற்று பெய்த மழையினால் நிலவிய புழுக்கமான காலநிலை மாறியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் வழமைக்கு மாறான கடும் வெப்பநிலை நிலவி வந்தது. நேற்றைய மழையினால் இந்த வெப்பம் கணிசமாகக் குறைந்துள்ளது.

நேற்று மதியம் யாழ்.மாநகரம், யாழ்.நகர்ப்பகுதி, நல்லூர், திருநெல்வேலி, கொழும்புத்துறை மற்றும் பாசையூர் உள்ளிட்ட நகரை அண்மித்த பகுதிகளில் மிதமான மழை பெய்தது. கடந்த சில நாட்களில் சாவகச்சேரி, அச்சுவேலி மற்றும் நெல்லியடி போன்ற புறநகர்ப் பகுதிகளில் ஓரளவு மழை பெய்திருந்தது. (ம-7)

## யாழில் மழை...

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 11ஆம் நாள் அகழ்வுப்பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது.

அகழ்வுப் பணிகள் நடைபெற்று வந்த நிலையில், செம்மணி பகுதியில் திடீரென மதியம் மழை பொழிந்தமையால், அகழ்வுப் பணிகளுக்கு இடையூறு ஏற்பட்டன. அத்துடன் புதைகுழிப் பகுதிக்குள் வெள்ள நீரும் தேங்கத் தொடங்கியது.

அதனை அடுத்து நல்லூர் பிரதேச சபையின் கலி பவுசர்களை அழைத்து, அவற்றின் மூலம் வெள்ள நீர் வெளியேற்றப்பட்டன.

இந்நிலையில் நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது, ஒரு என்புக் கூடு அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட என்புக் கூடுகளில் இரண்டு என்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் இது வரையான காலப் பகுதியில் செம்மணி மனிதப்புதைகுழியில், 260 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 256 மனித என்புக் கூட்டுத் தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று சனிக்கிழமை 12ஆம் நாள் அகழ்வுப் பணிகள் அரை நாட்கள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுஉள்ளதாகவும் அதற்கு இடையில் மழை குறுக்கிட்டால், நீதிமன்ற அனுமதியுடன் அகழ்வுப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தி, திருகிழமைகளின் பின்னர் நீதிமன்று குறிப்பிடும் நாளொன்றில் மீள ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாகச் சட்டத்தரணி வி.எஸ் நிரஞ்சன் தெரிவித்தார். (ம-7,33)

## பயணிகள்...

காரணமாக இன்று இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை காங்கேசன்துறையிலிருந்து நேற்று மதியம் நாகப்பட்டினம் நோக்கி 150 பயணிகளுடன் புறப்பட்ட பயணிகள் கப்பல், இந்திய பெருங்கடலில் ஏற்பட்ட கடல்சீற்றம் மற்றும் இயந்திரக் கோளாறு காரணமாகப் பல மணிநேர தாமதத்திற்குப் பின் பாதுகாப்பாக நாகப்பட்டினம் துறைமுகத்தைச் சென்றடைந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2026.05.08
சீட்டிழுப்பு இலக்கம் 6183
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
X 2 6 4 7 9 4
அத சம்பத
X 4 7 9 4
சீட்டிழுப்பு இலக்கம் 758

சுப தவசக்
திகதி 2026.05.08
சீட்டிழுப்பு இலக்கம் 0299
தனுசு 05 47 67
4857

தன நிதானய
திகதி -2026.05.08
சீட்டிழுப்பு இலக்கம் - 2213
E 07 63 64 79 E

மெகா பவர்
திகதி 08/05/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2531
Y 10 01 12 13 16

ஜய JAYA
திகதி 2026.05.08
சீட்டிழுப்பு இலக்கம் 0451
P 6 0 7 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4425
சீட்டிழுப்பு திகதி | 08.05.2026
L 26 49 60 67
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.05.08
சீட்டிழுப்பு இலக்கம் 1492
மிதுனம் 27 33 42 59 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.05.2026 வெற்றி வாரம் 0891
V 9 5 8 7 8 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28.053.952.00
அபிவிருத்தி லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3157
25000 பணப் பரிசு 57573
சீட்டிழுப்பு திகதி 2026.05.08
தினம் வெள்ளிக்கிழமை
06 19 39 59 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.123,235,052.80

சனிதா
திகதி 08.05.2026 வெற்றி வாரம் 5318
08 38 53 72 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,705,483.60
ரூ. 50,000/- பணப்பரிசு 77579

சசிரி
வெற்றி வாரம் 987
சீட்டிழுப்பு திகதி 08.05.2026
வெள்ளிக்கிழமை
05 41 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,895,680.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4869
சீட்டிழுப்பு திகதி 08.05.2026
தினம் வெள்ளிக்கிழமை
01 11 33 46 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,160,843.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 25 10 15 25 50
சீட்டிழுப்பு வாரம் 2333
08.05.2026 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.262,410,531.20

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2983
சீட்டிழுப்பு திகதி: 2026.05.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,346,996.80
11 14 22 26 L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# புதிய காவலன் விவாகப் பொருத்துனர் நிலையம்

## தலைமைக்காரியாலயம் கோப்பாய்


## புதிய காவலன் விவாகப்பொருத்துனர் நிலையத்தின் வேலைநாட்கள் பற்றிய அறிவித்தல்

- கோண்டாவில் மேற்கு நிருவுக்கு முன்னுள்ள காரியாலயம் சனிக்கிழமை(விடுமுறை) தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை திறந்திருக்கும்.
- திங்கள், வியாழன் நாட்களில் காலை 10.30 மணியில் இருந்து பிற்பகல் 1.00 மணிவரை விவாக ஆலோசனை இடம்பெறும்.
- கோண்டாவில் கிழக்கு பலாலி வீதியில் இலங்கை மின்சாரசபை காரியாலயத்திற்கு முன்பாக இயங்கும் எமது காரியாலயம் வெள்ளிக்கிழமை(விடுமுறை) தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை திறந்திருக்கும்.
- விவாக ஆலோசனை காலை 8.30 தொடக்கம் காலை 10.00 மணிவரை இடம்பெறும்.
- திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 08.30 மணியிலிருந்து காலை 10.00 மணி வரை நடைபெற்று மீண்டும் மாலை 3.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை இடம்பெறும்.
- மானிப்பாய் வீதி, உரும்பிராய்ச் சந்தியில் இயங்கும் எமது காரியாலயம் சனிக்கிழமை(விடுமுறை) தவிர்ந்த ஏனைய நாட்களில் பிற்பகல் 2.00 மணியிலிருந்து 7.00 மணிவரை திறந்திருக்கும்.
- விவாக ஆலோசனை பிற்பகல் 5.30 மணியிலிருந்து இடம்பெறும்.
- தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலயத்திற்கு முன்னுள்ள காரியாலயம் புதன்கிழமை(விடுமுறை) தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை திறந்திருக்கும்.
- விவாக ஆலோசனை செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலை 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை இடம்பெறும்.
- அல்வாய் சதா பொன்ஸ் ரியூசன் சென்றருக்கு அருகில் இயங்கும் எமது காரியாலயம் ஞாயிற்றுக்கிழமை(விடுமுறை) தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை திறந்திருக்கும்.
- விவாக ஆலோசனை புதன் மற்றும் சனிக்கிழமைகளில் காலை 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை இடம்பெறும்.
- பருத்தித்துறை வீதி கோப்பாய்ச் சந்தியில் அமைந்துள்ள எமது தலைமைக் காரியாலயம் செவ்வாய்க்கிழமை(விடுமுறை) தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை திறந்திருக்கும்.
- விவாக ஆலோசனை புதன், வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை 3.00 மணியிலிருந்து 5.15 மணிவரை இடம்பெறும்.

இங்ஙனம்
உரிமையாளர் - ப.முருகையா
077 663 0273, 074 382 0000
(C-5598)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை கனகரட்ணம்



பிறப்பு 24.07.1956 | இறப்பு 27.04.2026

யாழ்.நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கனகரட்ணம் அவர்கள் கடந்த (27.04.2026) திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் 'புனிதவதி, தம்பித்துரை, சிவலிங்கம், மணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 1 place Du Parc Aux Charrettes 95300 Pontoise எனும் முகவரியில் எதிர்வரும் (11.05.2026) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வைக்கப்பட்டு பின்னர் இறுதித் தகனத்திற்காக முற்பகல் 10.50 மணியளவில் Crematoriom - St quen Laumone: 35Avenue De verdun, 95310 Saint Quen Laumone எனும் முகவரிக்கு எடுத்துச் சென்று வைக்கப்பட்டு முற்பகல் 11.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல் : சின்னத்துரை குடும்பம்
சி.மணியம் - 0094 75 940 4953
(C-5600)

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 199/= | Mx 3Kg |
| 1Kg கோதுமை மா | - 153/= | Mx 10Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 229/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 235/= | |
| 1Kg அரிசி மா | - 237/= | |
| 1Kg குத்தரிசி | - 239/= | |
| 1Kg உடையல் பச்சையரிசி | - 210/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 172/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 219/= | |
| 1Kg வெள்ளைநாடு | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 211/= | |
| 1Kg சம்பா அரிசி | - 240/= | Mx 2Kg |
| 1Kg பால்பொன்னி | - 255/= | Mx 2Kg |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2599/= ~~3000/=~~ | |
| 1Kg கடலை | - 339/= | |
| 1Kg பொன்னி | - 240/= | Mx 2Kg |
| 01 அங்கர் யோக்கட் | - 55/= ~~80/=~~ | |




காசு மூலமான கொள்வனவுகளுக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு.
வடமராட்சி, தென்மராட்சி டெலிவரி விநியோகங்களும் உண்டு.
டெலிவரி : 076 800 6500
(2310)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சி மற்றும் வவுனியாவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
அடிப்படைச் சம்பளம் - 30,000/=
076 889 1308
077 606 1333
(2308)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்க்கின்றோம்
சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
0777 068 777
(C-5596)

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lanka tiles நிறுவனத்திற்கு விற்பனையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் காட்வெயார் அனுபவம் உள்ளவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தங்களிடம் உள்ள சுயவிபரக்கோவையுடன் நேரில் சமூகம் தரவும்.

நிர்வாகம்

T.P : 077 743 5265
(C-5597)

## உங்கள் பெற்றோர் உங்கள் வாழ்க்கை.....

அவர்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பாக மாற்றுவது எங்கள் பொறுப்பு

Royal Elders Care Home



- 24 மணிநேர கவனம்
- மருத்துவ சேவை
- சத்தான உணவு
- பாதுகாப்பான சூழல்

♥ அன்பு,
♥ மரியாதை,
♥ பராமரிப்பு
அனைத்தும் ஒரே இடத்தில்

# ROYAL ELDERS CARE HOME

"அவர்கள் சிரிப்புத்தான் எங்கள் வெற்றி"

***ROYAL ELDERS CARE HOME***

Wher care meets Dignity & Comfort
PREMIUM ELDER CARE SERVICES

- ❖ 24/7 Professional care
- ❖ Healthy & Hygienic Food
- ❖ Medical Support
- ❖ Peaceful and Safe Environment

பெண்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது.

076 346 6379
Vempan Road, Urumpirai South.
(2311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.